

# மரணயோகம்

ராஜேஷ்குமார்

## 1

சந்தியா முகத்தில் குளிர்ந்த நீரை அள்ளித் தெளித்து அன்றைய நாளின் மொத்த களைப்பையும் விரட்டினாள்.

டவலால் ஈரத்தை ஒற்றிக்கொண்டே வீட்டுக்குள் வந்தபோது அம்மா பாகீரதி காப்பி டம்ளரை நீட்டினாள். டம்ளர்க்கு மேலே காப்பியின் உஷ்ணம் புகையாய் அசைந்தது.

அப்பா சுகவனம் ஹாலில் இருந்து உரத்த குரலை வெளியிட்டார்.

"சந்தியா..."

"என்னப்பா...?" என்று கேட்டவளின் குரலில் குல்ஃபியின் இனிப்பும் குளிர்ச்சியும் சரிவிகிதத்தில் கலப்படமாகியிருந்தது. அப்பொழுது தான் முகம் கழுவியிருந்ததால் மேக்கப்பே இல்லாமல் காட்சியளித்த சந்தியாவிடம் ஒரு எளிமையான தேவதைத்தனம் குடியிருந்தது.

சுகவனம் கத்தினார்.

"ஆபீஸ் பேகை இப்படி எறிஞ்சிட்டுப் போயிருக்கே... ஒழுங்கா ஆணியில் மாட்டி வெக்கக் கூடாதா...?"

"இதோ வந்துட்டேம்ப்பா..."

"மொதல்ல வந்து பேகை எடுத்துவை... அப்புறம் காலைல ஆபீஸ் போற அவசரத்தில் அதைக் காணோம் இதைக் காணோம்ன்னு ஆர்ப்பட்டம் பண்ணிட்டிருக்கக்கூடாது."

"ரொம்ப களைப்பா இருந்தது... முகம் கழுவிட்டு வர்றதுக்குள்ளே புலம்ப ஆரம்பிச்சிட்டிங்களா...?"

சொன்ன சந்தியா காப்பி டம்ளரை நீட்டும் பாகீரதியிடம் திரும்பி பேசினாள்.

"இரும்மா... பேகை எடுத்து வெச்சிட்டு வந்துடறேன்... இல்லேன்னா அப்பா சைரன் மாதிரி திரும்பத் திரும்ப சொல்லிட்டே இருப்பார்..."

"பேகை நான் எடுத்து வெச்சிக்கிறேன்... நீ காப்பியைப் பிடி..."

தேன் நிற நூல் புடவையிலிருந்த பாகீரதி டம்ளரை அவள் கையில் திணித்துவிட்டு



ஹாலுக்குப் போனாள்.

டீபாய்மேல் கிடந்த சந்தியாவின் கைப்பையை எடுத்து சுவர் ஆணியில் மாட்டிக் கொண்டே சுகவனத்தைப் பார்த்துச் சொன்னாள்.

"அவ இங்கே இருக்கப் போறது இன்னும் கொஞ்ச நாள்தான் - அதுவரைக்குமாவது தொணதொணக் காம இருக்கக் கூடாதா...?"

"நான் இப்ப என்ன சொல்லிட்டேன்...? அவளே எதுவும் சொல்லலை... நீதான் இஷ்யூ ஆக்கறே..."

"நாளைக்கு அவ வேற வீட்டுக்கு போனப்புறம் நீங்க யார்கிட்டே தொணதொணப்பீங்க...? இருக்கற வரைக்கும் குழந்தைகிட்டே சந்தோஷமாப் பேசலாம் இல்லே...?"

"பைத்தியம்...! நான் நல்லதைத்தானே சொல்றேன்... இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயத்தையெல்லாம் இங்கே நான் சொன்னா எந்தப் தப்பும் இல்லே... நாளைக்கு வேற வீட்டுக்குப் போனப்புறம் மாமனாரோ, மாமியாரோ சொன்னா அதுதான் பிரச்சனையா உருவெடுக்கும்..."

"எங்கே எப்படி இருக்கணும்ன்னு அவளுக்கு நல்லாத் தெரியும்... போன வாரம் கோயில்ல அவளோட ஆபீஸ் மேனேஜரைப் பார்த்தேன். சந்தியாவை எப்படிப் புகழ்ந்தார் தெரியுமா...? அவளுக்கு நீங்க புதுசா எதுவும் கத்துத்தர வேண்டியதில்லை..."

பாகீரதி சொன்னபோது காப்பியை உறிஞ்சிக் கொண்டே - அங்கே பிரசன்னமானாள் சந்தியா.

"என்ன... நான் இங்கே இருக்கப் போறது கொஞ்சநாள் தான்... அப்படின்னு காதில் விழுந்தது...? என்னை எங்கே விரட்டலாம்ன்னு உத்தேசம்...?"

"நேரம் காலம் கூடறப்போ பொட்டைப் புள்ளைங்களை வேற வீட்டுக்கு அனுப்பித்தானே ஆகணும்..."

"என்னம்மா சொல்றீங்க...?"

"போன மாசம் உன்னைப் பார்த்துட்டுப் போனாங்களே... அவங்க கிட்டே இருந்து இன்னிக்கு தகவல் வந்திருக்கு..."

"என்னன்னு...?"

''நம்மகிட்டே சம்பந்தம் வெச்சிக்க அவங்களுக்கு பரிபூர்ண சம்மதமாம்...''

''பொருத்தம் பார்க்கணும்ன்னு அப்பா சொல்லிட்டிருந்தாரே...''

''உங்கப்பாவைப் போல ஒரு வறட்டுப் பிடிவாதம் பிடிக்கறவரை நான் பார்த்ததேயில்லை. 'ஜாதகம் பார்க்கிற வழக்கம் எங்க குடும்பத்தில் இல்லை... சம்பந்தம் மனசுக்குப் பிடிச்சாப் போதும்...' அப்படின்னு அவங்களே சொல்லிட்டாங்க... அடுத்து ஆக வேண்டியதைப் பார்க்க வேண்டியதுதானே...? இவர் சும்மா இருக்காம 'மாப்பிள்ளையோட ஜனன குறிப்புகளை குடுத்தனுப்புங்க... எங்க திருப்திக்காக நாங்க ஜாதப் பொருத்தம் பார்த்துட்டு அதுக்கப்புறமா நாள் குறிச்சிக்கலாம்'ன்னு சொல்லியிருக்கார்.''

சந்தியா புன்னகைத்தாள்.

''உங்களுக்கு ஜாதகம் ஜோசியம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லையாம்மா...?''

''அப்படி இல்லைடி... எல்லாத்தையும் விட ஒரு நல்ல இடத்தில் பொண்ணைக் கரை சேர்க்கறதுதான் முக்கியம்...''

''எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. அதுக்காக அப்பாவை ஏன் குறை சொல்லணும்...? அவரோட திருப்திக்காக பார்த்துட்டுப் போகட்டுமே...?''

''அவங்களே வேண்டாம்ன்னு சொன்னபிறகு... எதுக்காக அநாவசியமா நாளைக் கடத்தணும்...?''

சுகவனம் குறுக்கிட்டார்.

''இதுக்காக நான் நாளைக் கடத்தமாட்டேன்... கையோட அந்த வேலையை முடிக்க ஏற்பாடு பண்ணிட்டேன்... ஜோதிடர் பாலசிகாமணி வர்றதுக்காகத்தான் காத்திட்டிருக்கேன்... கிராமத்துக்கு சொல்லிவிட்டிருக்கேன்... எந்த நிமிஷமும் அவர் வந்துடுவார்...''

பாகீரதி ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தாள்.

''அவருக்கு சொல்லி விட்டுட்டிங்களா...? மாப்பிள்ளையோட குறிப்புகள் இல்லாம எப்படிப் பொருத்தம் பார்க்க முடியும்...?''

சுகவனம் சிரித்தார்.

''குறிப்புகள் வந்து சேர்ந்துடும்...''



''எப்படி...?''

''பக்கத்து வீட்டு சஞ்சய் கொண்டு வருவான்...''

சந்தியா ஆச்சரியத்தை வெளியிட்டாள்.

''அந்த அண்ணாகிட்டேயா குடுத்தனுப்பறாங்க...?''

''மாப்பிள்ளையோட ஆபீஸ், சஞ்சய் வேலை பார்க்கற இடத்துக்குப் பக்கத்தில்தான் இருக்கு... அதனால அவன்கிட்டே குடுத்துவிடறேன்னு சொன்னாங்க...''

சுகவனம் சொல்லிக் கொண்டிருந்தபோது - வாசற்புறம் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.

தொடர்ந்து சஞ்சய் உள்ளே பிரவேசித்தான்.

அவன் உள்ளே வரவே சுகவனம் கேள்வியை விடுத்தார்.

''சஞ்சய்... அவங்க குறிப்புகளைக் குடுத்தாங்களா...?''

சர்ட் பாக்கெட்டில் கையை நுழைத்து நாலாய் மடித்த அந்த மஞ்சள் தடவின காகிதத்தை எடுத்தான்.

''மாப்பிள்ளையே நேரில் வந்து தந்துட்டுப் போனார்...''

''வேற ஏதாவது சொன்னாரா...?''

''ஆபீஸ் கான்டீன்ல போய் காப்பி சாப்பிட்டுகிட்டே பொதுவாப் பேசினோம்... சந்தியாவை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு பேச்சிக்கிடையே சொன்னார்...''

''அண்ணா... அவர் நல்லாப் பேசினாரா...?''

கேட்ட சந்தியாவுக்கு புன்னகையுடன் பதில் தந்தான்.

''ரொம்ப ஜோவியலாப் பேசினார்... ரொம்ப இன்டெலிஜென்ட்டாத் தெரியறார்... உனக்கு எல்லா வகையிலும் பொருத்தமா இருப்பார்ன்னு தான் எனக்குத் தோணுது...''

பாகீரதி குறுக்கிட்டாள்.

''இதுக்கு மேல் என்னங்க வேணும்...? சும்மா இருக்காம நீங்க ஏங்க தேவையில்லாம காரியம் பண்ணிட்டிருக்கீங்க...?''

சுகவனம் ஏதோ பதில் சொல்ல வந்தபோது... வாசலில் செருப்பு சத்தம் கேட்டது.

'டொக்... டொக்...'

கதவுத் தட்டல்.
''உள்ளே வாங்க...''
பாகீரதி குரல் தர பாலசிகாமணி பிரவேசமானார். ஐம்பத்தைந்து வயதுக்கு மதிக்காமல் தடித்த கண்ணாடி அணிந்திருந்தார். நடையில் லேசான தள்ளாட்டம் இருந்தது. கதர் சர்ட்டும், வேட்டியும் அணிந்திருந்தார். நெற்றியில் பட்டையாய் சந்தனம். மத்தியில் குங்கும வட்டம்.
''உக்காருங்க ஜோசியரே...''
சுகவனம் மடக்கு நாற்காலியைக் காட்டினார்.
அதில் உட்கார்ந்து கொண்டே தன் முதிர்ந்த குரலை வெளித்தள்ளினார் பாலசிகாமணி.
''குழந்தைக்குக் கல்யாணம் பேசியிருக்கிற தகவல் கேள்விப்பட்டேன்... ரொம்ப சந்தோஷம்...''
''அவங்க முழு சம்மதமும் சொல்லிட்டாங்க... நாங்கதான் எதுக்கும் நம்ம திருப்திக்காக பொருத்தம் பார்த்துடலாமேன்னு நினைச்சு உங்களுக்கு தகவல் சொல்லி அனுப்பினேன்...''
''நம்பிக்கை இல்லாதவங்களை விட்டுடலாம்... நம்ம குடும்பங்களில் ஒரு காரியம்ன்னா ஜாதகம் பார்த்து பண்றதுதானே வழக்கம்... அதன்படியே செய்யறதுதான் நல்லது...''
சொன்னவரிடம் சுகவனம் அந்தத் தாளை நீட்டினார்.
''மாப்பிள்ளையோட ஜாதகம் இல்லை... ஜனன கால குறிப்புகள் மட்டும் இருக்கு...''
''அதுபோதும்... அதை வெச்சு நான் கணக்குப் போட்டுக்கறேன்... நம்ம குழந்தை சந்தியாவோட ஜாதகம் இருக்கா...?''
''பாகீரதி... எடுத்துட்டுவா...''
அவள் ஒரு பழுப்படைந்த நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு வந்து தந்தாள்.
டீபாயின் மேல் காகிதங்களைப் பரப்பி... பவுண்ட்டன் பேனாவை திறந்து வைத்துக் கொண்டு கணக்குகளைப் போட ஆரம்பித்தார்.
காகிதங்களில் கட்டங்கள் விழுந்தன.
பஞ்சாங்கத்தின் பொடி எழுத்துக்களைக் கூர்ந்து பார்த்து விபரங்களைக் குறித்தபடி இருந்தார்.
ஏறக்குறைய அரைமணி நேரம் கழித்து -



பேனாவை மூடிவைத்தார்.
''என்ன ஜோசியரே... ரெண்டுபேர் ஜாதகமும் என்ன சொல்லுது...? பொருத்தம் இருக்கா...?''
''அமோகமான பொருத்தம் இருக்கு... ஆறேழு பொருத்தம் இருந்தாலே போதும்ன்னு சொல்லுவாங்க... இவங்களுக்கு பத்துக்கு ஒன்பது பொருத்தம் இருக்கு...''
சுகவனம் முதற்கொண்டு அத்தனை பேரின் முகங்களும் சூரியப் பிரகாசத்துக்குப் போயிற்று.
''அப்படின்னா கையோட கல்யாணத் தேதியையும் குறிச்சிடலாமா...?''
பாலசிகாமணி உற்சாகமில்லாத பலகீனக் குரலை வெளியிட்டார்.
''அதுல ஒரு சிக்கல் இருக்கு...''
''என்ன சிக்கல்...?''
''அது... அது... வந்து...''
''என்னவா இருந்தாலும் பளிச்சின்னு சொல்லுங்க ஜோசியரே...''
''எல்லார் முன்னிலையிலும் வெளிப்படையா சொல்லத் தயக்கமா இருக்கு... உங்கக்கிட்டே நான் தனியா சொல்ல விரும்பறேன்...''
சுகவனம் குழப்பமாய் அவரைப் பார்த்துக் கொண்டிருக்க... சஞ்சய் நாசூக்காய் விடை பெற்றான்.
''அப்போ நான் கிளம்பறேன்...''
அவர்களின் பதிலுக்காகக் காத்திருக்காமல் வெளியேறிச் சென்றான்.
பாகீரதி சந்தியாவை விரட்டினாள்.
''சந்தியா... நீ உள்ளே போ...''
மனசுக்குள் கேள்விக் குறிகள் பிறந்திருந்தாலும், பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு உள்ளே சென்று விட்டாள் சந்தியா.
சுகவனம் தொண்டையைச் செருமினார்.
''இப்போ சொல்லுங்க... எல்லாப் பொருத்தமும் இருக்குன்னு சொல்றிங்க... ஆனாலும் ஒரு சிக்கல் இருக்குன்னு புதிர் போடறிங்க...''
''சிக்கல் உங்க பொண்ணு சந்தியாவோட ஜாகத்தில் இருக்கு...''

''புரியும்படியா சொல்லுங்க ஜோசியரே...''

''பொதுவா ஜோதிடம் பார்த்துச் சொல்றவங்ககிட்டே ஒரு பழக்கம் இருக்கு... பெரும்பாலும் நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்றதோட நிறுத்திப்பாங்க... கடுமையான கெட்ட பலாபலன்களை சொல்லத் தயங்குவாங்க... ஆனா நான் அப்படி இல்லை... நல்லதா இருந்தாலும் சரி... கெட்டதா இருந்தாலும் சரி... நான் கணிச்சதை பிட்டுப் பிட்டு வெச்சிடறதுதான் என் வழக்கம்...''

''பீடிகை போட வேண்டாம்... விஷயத்தைச் சொல்லுங்க...''

சில விநாடி மரண அமைதி காத்த பாலசிகாமணி மெதுவாய் குரலை வெளியிட்டார்.

''நான் சொல்லப் போறது உங்க ரெண்டு பேர்க்குமே - பொண்ணைப் பெத்தவங்கங்கற முறையில் ரொம்ப அதிர்ச்சியா இருக்கும்... அதனால மனசை திடப்படுத்திக்கங்க...''

அதிகரித்த இருதயத் துடிப்புடன் அவர் உதட்டையே பார்த்தார்கள் சுகவனமும், பாகீரதியும்.

பாலசிகாமணி தொடர்ந்து சொன்ன வார்த்தைகள் இருவரின் இதயப் பிரதேசத்திலும் அதிர்ச்சிப் புழுதியை எழுப்பும் டயனமைட்டாய் வெடித்தன.

## 2

சுகவனம் திடுக்கிட்ட குரலில் பாலசிகாமணியைப் பார்த்துக் கேட்டார்.

''எ... என்ன சொல்றிங்க... ஜோசியரே...?''

''உங்க பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்ங்கற ஆசையை நீங்க சுத்தமா மறந்துடறது நல்லது.''

''ஜோசியரே...''

பாகீரதி கத்தினாள்.

அவர் அமைதியாய்ச் சொன்னார்.

''ஆவேசப் படறதில் அர்த்தமில்லைம்மா... உங்க பொண்ணோட ஜாதம் அப்படி இருக்கு...''

''அவளோட ஜாதகத்தில் என்ன குறைச்சல்...?''



''பித்ருமூர்க்க தோஷம் அவ பொறந்த நேரத்தில் கூடி வந்திருக்கு...''

''அதனால...?''

''பெத்தவங்க செஞ்ச பாவம் பிள்ளைகளைத்தான் வந்தடையும்ன்னு சொல்லுவாங்க இல்லையா...? இவளோட விஷயத்தில் அதுதான் நடந்திருக்கு...''

''நாங்க என்ன பாவம் செஞ்சோம்...?''

''நீங்க இல்லை... உங்க பரம்பரையில் ஏதோ ஒரு தலைமுறையில் பெரியவர் ஒருத்தரின் கோபத்துக்கு ஆளாகியிருக்கிங்க... அவரோட சாபம் இவ பொறந்த நேரத்தில் கூடி வந்திருக்கு...''

''புரியும்படியா சொல்லுங்க... இவளுக்கு கல்யாணம் பண்ணக்கூடாதுன்னு ஏன் சொல்றீங்க...?''

''பண்ணினா நிலைக்காது... அந்த சாபத்தின் காரணமா அவளுக்கு மாங்கல்ய பலம் கொஞ்சமும் இல்லை... அவளுக்கு எத்தனை பேரைக் கல்யாணம் பண்ணி வெச்சாலும்... புருஷனோட உயிரை அடிச்சிடும்...''

அவர் சொன்னதைக் கேட்டு விக்கித்துப் போய் நின்றார்கள் இருவரும்.

சுகவனம் மெல்லக் கேட்டார்.

''இதுக்குப் பரிகாரம் ஏதாவது இருக்கா...?''

''இருந்தா மொதல்ல அதைச் சொல்லியிருப்பேனே... அந்த சாபத்தை உங்க வம்சத்தில் குறைந்த பட்சம் ஒரு தலைமுறையாவது அனுபவிச்சாகணும்ங்கறது விதி... துரதிர்ஷ்டவசமா உங்க மக பொறந்த நேரத்தில் அந்த விதி விளையாடிடுச்சு...''

பாலசிகாமணி தன்னுடைய பழுப்பேறிய காகிதங்களை மஞ்சள் பைக்குள் திணிக்க ஆரம்பித்தார்.

''உங்களுக்கு இப்படி ஒரு மோசமான பலாபலனை சொல்ல நேர்ந்ததுக்காக ரொம்ப வருத்தப்படறேன்...''

பையைக் கக்கத்தில் அடக்கிக்கொண்டு கை கூப்பினார்.

''நான் வர்றேன்...''

அவருக்கு விடை கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தார் சுகவனம்.

கவலை அவர் முகத்தின் ஒவ்வொரு மில்லி மீட்டர் பரப்பையும் அடித்துப் போட்டிருந்தது.

"இப்ப என்ன பண்ணலாம் பாகீரதி...?"

"சந்தியாவுக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் பண்ணிப் பார்க்கவே வேண்டாம்ங்கற மாதிரி இல்ல சொல்றார்..."

"பண்ணினா புருஷனோட உயிரை அடிச்சிடும்ன்னு சொல்றார்..."

"நமக்கிருக்கறது ஒரே பொண்ணு... அவளை கல்யாணப் பொண்ணா பார்க்கணுங்கறது எத்தனை நாள் கனவு...!"

"அதுக்காக தெரிஞ்சே ஒருத்தரோட உயிர் பலியாக காரணமா இருக்கலாமா...?"

"பரிகாரம் இல்லைன்னு இவர் சொல்றார்... எந்த ஒரு பிரச்சனைக்கும் பரிகாரம் இல்லாமப் போகாது..."

"ஜோதிடம் கணிக்கறதைப் பொறுத்த வரைக்கும் இவர் அளவுக்கு அனுபவசாலி யாரும் கிடையாதுன்னு நான் அடிச்சி சொல்லுவேன் பாகீரதி..."

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க 'எங்களுக்கு ஜோதிடம், ஜாதகம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை'ன்னு சொல்லிட்டாங்களே... அதே போல நாமும் விட்டிருந்தா இப்ப இதைப்பத்திக் கவலைப்படுவோமா...?"

"நீ முட்டாள்த்தனமாப் பேசாதே... நாமதான் பார்த்துட்டோமே..."

"பார்த்தா என்ன...? பார்க்கலைன்னு நினைச்சிட்டு மேற்கொண்டு கல்யாண காரியங்களைக் கவனிக்க வேண்டியதுதான்..."

"பாகீரதி... குழந்தைங்க வாழ்க்கையில் விதியோட சேர்ந்து நாமும் விளையாடக் கூடாது..."

"நீங்க கொஞ்சம் சும்மா இருங்க... ஜாதகத்தில் நம்பிக்கை இல்லாத சம்பந்தம் நமக்குக் கிடைச்சது பெரிய அதிர்ஷ்டம்தான்... இந்த சம்பந்தத்தை நழுவவிட்டா அப்புறம் நம்ம பொண்ணுக்கு



கல்யாணமே நடக்காது..."

"என்ன பேச்சுப் பேசறே... ஒரு பையன் வாழ்க்கையும் சேர்ந்து வீணாப் போயிடும்..."

"அதெல்லாம் போகாது... ஜாதகம் ஜோசியம் எல்லாத்தையும் ஓரளவுக்குத்தான் நம்பணும்... எனக்கு இதில் உள்ள நம்பிக்கையை விட கடவுள் மேல அதிக நம்பிக்கை இருக்கு... நான் கும்பிடற பெரியபாளையத்தம்மன் என்னை நிச்சயமா கைவிடமாட்டா... அவங்க ரெண்டு பேர்க்கும் அமோகப் பொருத்தம் இருக்குன்னு அவர் வாயாலேயே சொல்லிட்டார்... அதுபோதும்... பித்துக்குளித்தனமா நீங்க எதுவும் உளறிட்டிருக்க வேண்டாம்... கல்யாணத்துக்கு ஒரு தேதியைக் குறிச்சி அவங்களுக்கு சொல்லி அனுப்பிடுங்க..."

பாகீரதி தீர்மானமாய்ச் சொன்னாள்.

## 3

கதவைத் தள்ளி உள்ளே நுழைந்த சந்தியாவை ஏசி குளிர் முற்றுகை இட்டது.

மேனேஜர் பரஞ்சோதி நிமிர்ந்தார்.

"குட்மார்னிங் ஸார்..."

"குட்மார்னிங்..."

மேஜைக்கருகே வந்தவளை ஏறிட்டுக் கேட்டார்.

"என்ன விஷயம்...?"

சந்தியா தன் கைப்பையைப் பிரித்து உள்ளிருந்து அந்த நீள்சதுரப் பத்திரிகையை எடுத்து நீட்டினாள்.

"வர்ற இருபதாம் தேதி எனக்குக் கல்யாணம் ஸார்..."

ஆச்சர்யத்துடன் பத்திரிகை வாங்கினார் பரஞ்சோதி.

"நிச்சயமாகியிருக்குன்னு சொல்லிட்டிருந்தே... பத்திரிகையே வந்தாச்சா... கங்ராஜுலேஷன்ஸ்..."

"தாங்க்யூ ஸார்..."

"மாப்பிள்ளை என்ன பண்றார்ன்னு சொன்னே...?"

"ரேடோ ப்ராடக்ஸ் லிமிட்டெட்ங்கற கம்பெனியில் மார்க்கெட்டிங் மேனேஜரா இருக்கார் ஸார்..."

"ரேடியேட்டர்கள் தயாரிக்கற கம்பெனிதானே...?"

"ஆமா ஸார்..."

"குட் கம்பெனி... எனி வே... உனக்கு ஒரு வளமான வாழ்க்கை அமைய என்னோட வாழ்த்துக்கள் சந்தியா..."

"நீங்க அவசியம் கல்யாணத்துக்கு வரணும் ஸார்... அங்கே வந்து எங்க ரெண்டு பேரையும் சேர்த்து ப்ளெஸ் பண்ணனும்..."

"ஷ்யூர்... அப்பாயின்மெண்ட் நோட்டில் குறிச்சு வெச்சிடு. ஷீலா கிட்டே ஞாபகப்படுத்திடு... நீ எப்ப இருந்து லீவ் போடற...?"

சந்தியா இன்னொரு கவரை அவரிடம் நீட்டினாள்.

"நான் என்னோட வேலையை ராஜினாமா பண்ணறேன் ஸார்..."

சின்ன அதிர்ச்சியோடு நிமிர்ந்தார் பரஞ்சோதி.

"ராஜினாமா பண்ணறியா... ஏன்...? உள்ளூர் மாப்பிள்ளை தானே...? கல்யாணத்துக்கப்புறமாக் கூட தாராளமா வேலைக்கு வரலாமே...? அவங்க வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்களா...? நான் வேணா அவங்ககிட்டே பேசிப் பார்க்கறேன்... சந்தியாவைப் போல திறமையான பொண்ணை வீட்டுக்குள் முடக்கி வீணடிக்காதீங்கன்னு கேட்டுப் பார்க்கறேன்..."

சந்தியா புன்னகைத்தாள்.

"ரொம்ப அருமையான சம்பந்தம் ஸார்... மாமனார் பல வருஷங்களுக்கு முன்னமே இறந்துட்டார்... மாமியார் மட்டும்தான்... அவங்களும் ரொம்ப மென்மையாத்தான் பேசறாங்க... என்னோட சுதந்திரத்தில் தலையிடறவங்களா தெரியலை... கல்யாணத்துக்கப்புறமா வேலைக்குப் போகக் கூடாதுன்னு அவங்க சொல்லலை. இந்த முடிவு நானா எடுத்த முடிவு..."

"ஏன் இப்படி ஒரு அபத்தமான முடிவை எடுத்திருக்கே சந்தியா...?"

"என்னோட மாமியார், கணவர் ரெண்டு பேரோட தேவைகளையும் முழுமையா நிறைவேத்தணும்ன்னு நினைக்கிறேன்... ஸார்..."



"எதுக்கும் உன்னோட முடிவை ரீ - கன்சிடர் பண்ணிப்பாரு... இந்த ராஜினாமா கடிதத்தை எடுத்துட்டுப் போ..."

சந்தியா அவரிடமே நகர்த்தி வைத்தாள்.

"ஸாரி ஸார்... நான் யோசிச்சு எடுத்த முடிவு இது... இந்த ரெசிக்னேஷனை கண்டிப்பா நீங்க ஏத்துக்கணும்..."

மேற்கொண்டு அவரைப் பேச அனுமதிக்காமல் புன்னகையுடன் கை கூப்பி விடை பெற்றாள் சந்தியா.

## 4

ரோஜா மாலை தோள்களில் வழிய வீடியோ ஃப்ளாஷின் மஞ்சள் வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள் மகேந்திரனும், சந்தியாவும். அவளின் கழுத்தில் புத்தம்புதுத் தாலிச்சரடு மின்னியது.

மகேந்திரன் சந்தியாவைவிட இரண்டு இன்ஞ்ச் உயரமாய் இருந்தான். சாம்பல் நிற சபாரியில் ஒரு சினிமா ஹீரோவுக்கு இணையான தோற்றத்துடன் காட்சியளித்தான்.

ஓயாமல் பரிசுப் பொருட்களை வாங்கியும், நமஸ்கரித்தும் இருவருக்கும் கைகள் வலித்தன. அடுத்தடுத்து உறவினர்களும், நண்பர்களும் வந்து கை குலுக்கியதால் உதடுகளில் இடைவிடாத புன்னகை தேவைப்பட்டது.

தூரத்தில் காலி நாற்காலிகளுக்கு நடுவே சுகவனமும், பாகீரதியும் உட்கார்ந்திருந்தார்கள்.

கல்யாண அலைச்சலால் உண்டான களைப்பு இருவரின் முகங்களிலும் அப்பட்டமாய்த் தெரிந்தது.

பாகீரதி புன்னகைத்தாள்.

"உக்காரக்கூட நேரமில்லாம ஒரு வாரமா செமத்தியான அலைச்சல்... இப்பதான் நிம்மதியா காலை நீட்டி உக்கார்றேன்..."

"உன்னால நிம்மதியா உக்கார முடியுது... என்னால நிம்மதிப் பெருமூச்சுகூட விடமுடியலை..."

பாகீரதி நிமிர்ந்து அவரை ஏறிட்டாள்.

''ஏன்...?''

''ஜோதிடர் சொல்லிட்டுப் போனது என்னோட மனசின் ஒரு மூலையில் இன்னும் உறுத்திக்கிட்டே இருக்கு...''

''எந்த நேரத்தில் எதைப் பேசறதுன்னு உங்களுக்கு விவஸ்தையே இல்லை... சந்தோஷமா இருக்க வேண்டிய இந்த நேரத்தில் அதையெல்லாம் ஏன் நினைக்கறிங்க...?''

''இப்போதானே ஞாபகத்துக்கு வருது...''

''ஜோசியத்தில் சொல்றதெல்லாமே சரின்னு சொல்ல முடியாது...''

''எதிர்மறையா பலன் சொன்னா அப்படிச் சொல்லி உன்னை நீயே ஆறுதல் படுத்திக்கறே... அவ்வளவுதான்... அவர் பெரிய அனுபவசாலி பாகீரதி...''

''அனுபவசாலி தப்புக் கணக்குப் போடமாட்டாரா...? யானைக்கும் அடிசறுக்கும்... தெரிஞ்சிக்கங்க...''

''சந்தியா அதுக்கப்புறம் எதுவும் கேக்கலையா...?''

''ஊஹூம்... அன்னிக்கு ஜோசியர் போனப்புறம் கேட்டா... 'என்னம்மா சிக்கல்?'ன்னு... 'உனக்கு தோஷம் இருக்கு... அந்த தோஷம் மாமனாரை அடிச்சிடும்... ஆனா மாமனார் இல்லாத வீட்டில்தானே உனக்கு வரன் பார்த்திருக்கோம்... அதனால கவலைப்பட ஒண்ணுமில்லை'ன்னு பொய் சொல்லி சமாளிச்சேன்... அதுக்கப்புறம் அவ எதுவும் கேக்கலை...''

பாகீரதி சொன்னபோது...

மணவறை அருகே ஏதோ பரபரப்பு தென்பட்டது.

''வழிவிடுங்க... வழிவிடுங்க...'' என்ற கூச்சல்கள் கேட்டன.

குறுக்கே போன சஞ்சய்யை நிறுத்திக் கேட்டார் சுகவனம்.

''அங்கே என்ன பிரச்சனை சஞ்சய்...?''

''தெரியலை ஸார்... என்னன்னு பார்க்கத்தான் போறேன்...''



சுகவனமும், பாகீரதியும் எழுந்து அவன் பின்னே வேகமாய்ப் போனார்கள்.

மணவறை அருகே சென்று கூட்டத்தை விலக்கிப் பார்க்க...

சந்தியா அதிர்ச்சியோடு நின்றிருந்தாள். மகேந்திரன் சற்றே நீலமடித்துப் போன உடம்போடு கீழே விழுந்து கிடந்தான்.

குரல்கள் பதட்டமாய் வெளிப்பட்டன.

''டாக்டர்க்கு போன் பண்ணுங்க...''

''மாப்பிள்ளை பாலைக் குடித்துத்தான் மயங்கிக் கீழே விழுந்தார்... பால் டம்ளரைப் பாரு...''

''உள்ளே பல்லி விழுந்திருக்கு...''

பாகீரதிக்கும், சுகவனத்துக்கும் அதிர்ச்சியில் தலை கிறுகிறுத்தது.

## 5

அந்தத் தனியார் ஆஸ்பத்திரியில் வராந்தாவில் பதட்டம் அப்பிய முகங்களோடு காத்திருந்தார்கள்.

விசித்து விசித்து அழும் மகேந்திரனின் அம்மாவை சமாதானப்படுத்த எல்லோரும் முயன்று கொண்டிருந்தார்கள். இன்னோர்புறம் கண்ணீர் திரண்ட கண்களுடன் சந்தியா நின்று இருந்தாள்.

பாகீரதி பேசத் திராணியில்லாமல் விக்கித்துப் போயிருக்க... சுகவனம் சன்னமான குரலில் அவளிடம் பல்லைக் கடித்தார்.

''வேண்டாம்ன்னு தலைதலையா அடிச்சிகிட்டேன்... நீ கேட்டியா...?தாலிகட்டி முழுசா ரெண்டு மணி நேரம்கூட ஆகலை... இப்போ என்ன ஆச்சு பாரு...''

பாகீரதி கன்னங்களில் கண்ணீரைச் சரித்தாள்.

''நான் கும்பிடற தெய்வம் என்னைக் கைவிடாதுன்னு நம்பி மோசம் போய்ட்டேங்க...''

''நீ தப்புப் பண்ணிட்டு தெய்வத்தைக் குறை சொல்லாதே...''

சஞ்சய் சற்றுத்தள்ளி ரிசப்ஷனிஸ்ட்டிடம் படபடத்தான்.

''மிஸ்... டாக்டர் பிர்தௌஸோட போன் நம்பர் என்னான்னு பாருங்க...''

''ஜஸ்ட் ஏ செக்கண்ட்...'' என்று சொல்லிவிட்டு சாவகாசமாய் அவள் டைரக்டரியைப் புரட்டினாள்.

சஞ்சய் பொறுமையில்லாமல் காத்திருந்தான்.

ஓரிரு நிமிஷங்கள் எடுத்துக் கொண்டு நெம்பரைப் பார்த்துச் சொன்னாள்.

''டபுள் எய்ட்... டபுள் ஃபைவ்... ஃபைவ் சிக்ஸ்...''

''டயல் பண்ணுங்க...''

நெயில் பாலீஷ் மின்னும் விரல்கள் தொலைபேசியின் பொத்தான்களை அழுத்தின.

மறுமுனையில் ரிங் போக, ரிசீவரை அவனிடத்தில் தந்தாள்.

''பேசுங்க...''

ரிசீவர் எடுக்கப்பட்டு ஒரு மென்மையான ஆண்குரல், ''ஹலோ...'' என்றது.

அது டாக்டர் பிர்தௌஸின் குரல் என்பதை உணர்ந்து வார்த்தைகளைப் படபடத்தான்.

''டாக்டர் ஐயாம் சஞ்சய்... அக்ரிகல்ச்சுரல் யுனிவர்சிடியில் இருக்கேன்... என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?''

சில விநாடி அமைதிக்குப் பின்னால் அவர் குரல் வெளிப்பட்டது.

''ஞாபகம் இருக்கு... ஒரு மூலிகைத் தாவரத்துக்காக அங்கே வந்தப்போ உங்ககிட்ட பேசினேன்... சொல்லுங்க என்ன விஷயம்...?''

''நீங்க உடனே வேதா க்ளினிக்கிற்கு வரணும்...''

''எதுக்கு...?''

''ஃபுட் பாய்ஸனாகி இங்கே ஒருத்தர் அட்மிட் ஆகியிருக்கார்... ட்ரீட்மெண்ட் தந்தித்திட்டிருக் காங்க... ஆனா இந்த நிமிஷம் வரைக்கும் நிலைமை சீரியஸாத்தான் இருக்கு...''

''யாரு...?''

''எனக்கு ரொம்ப வேண்டியவர்... மை ஸிஸ்டர்'ஸ் ஹஸ்பெண்ட்ன்னு வெச்சிக்கோங்களேன்...''

''பத்து நிமிஷத்தில் நான் அங்கே வர்றேன்...''

''தாங்க்யூ டாக்டர்...''

ரிசீவரை அதனிடத்தில் அமர்த்திவிட்டு திரும்பி வந்தான்.



சந்தியா, ''அண்ணா...'' என்றாள் கண்ணீரோடு.

''கவலைப்படாதே... விஷமுறிவு சிகிச்சை டாக்டர் எனக்கு ரொம்பத் தெரிஞ்சவர்... போன் பண்ணி சொல்லிட்டேன்... இப்போ வந்துடுவார்...''

பத்தாவது நிமிஷம் அவர் வந்துவிட்டார். குறுந்தாடி வைத்திருந்தார். நடையில் வேகம் இருந்தது. சஞ்சய்யை ஒரு பரிச்சயப் பார்வை பார்த்தபடி கேட்டார்.

''பேஷண்ட் எங்கே...?''

சாத்தியிருந்த அறைக்கதவைக் காட்டினான் சஞ்சய்.

அதனுள் பிரவேசித்தார் டாக்டர் பிர்தௌஸ்.

தவிப்பாய்க் கழிந்த அரைமணி நேரத்திற்குப் பின் அவரும் அந்தக் கிளினிக்கைச் சேர்ந்த டாக்டரும் வெளிப்பட்டார்கள்.

கூடியிருந்த எல்லோருமே ''டாக்டர்...'' என்று பதட்டத்தோடு இருவரின் முகத்தையும் பார்த்தார்கள்.

பிர்தௌஸ் முகத்தில் மெலிதான புன்னகையைக் காட்டினார்.

''பயப்படறதுக்கு எதுவுமில்லை... அபாயக்கட்டத் தைத் தாண்டியாச்சு... நௌ ஹீ ஈஸ் ஆல்ரைட்...''

சுகவனமும், பாகீரதியும் ஒருத்தரையொருத்தர் பார்த்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டார்கள்.

சுகவனம் சற்றே நடுங்கும் குரலில் சொன்னார்...

''பாகீரதி... நம்ம ஜோசியர் சொன்னதும் பொய்யாகலை... உன்னோட தெய்வ நம்பிக்கையும் வீணாகலை. அவனோட ஜாதக தோஷத்தால் அவருக்கு இருந்த கண்டத்தைத் தாண்டிட்டார்ன்னுதான் நான் நினைக்கறேன்...

## 6

மகேந்திரன் உற்சாகமாய் இருந்தான்.

சந்தியாவைப் பார்த்துக் கேட்டான்.

''ஒரு வாரத்துக்குத் தேவையான ட்ரஸ்களை எடுத்து வெச்சிட்டியா...?''

சந்தியா சுவரோரமாய் இருந்த சூட்கேஸைக் காட்டினாள்.

"நேத்திக்கே பேக் பண்ணி வெச்சிட்டேன்..."

"எப்படா ஹனிமூன்னு ரெடியா இருக்கே போலிருக்கு..."

சிரித்துக்கொண்டே சொன்னவனை செல்லமாய்க் குத்தினாள்.

"எடுத்த எடுப்பிலேயே தடங்கல்... ஹனிமூன் போகலைன்னா என்னனுன்னு நான் கேட்டேன்... என் மேலே பழியை போடறிங்களா...?"

"எதிர்பாராதவிதமா ரெண்டு நாள் ஹாஸ்பிடல் வாசம். அதனால எல்லாத் திட்டமுமே அப்செட் ஆயிடுச்சு..."

"இப்போ எப்படி... ஏற்கனவே போட்ட ப்ரொக்ராம்படி ரயில்தானா...?"

"ரிசர்வேஷன் கிடைக்கலை..."

"அப்ப என்ன பண்ணப் போறோம்...?"

"கே ஜே டிராவல்ஸ்..."

"டாக்சியா...?"

"டூரிஸ்ட் டாக்சி..."

"புக் பண்ணிட்டிங்களா...?"

"பண்ணியாச்சு..."

"டாக்சி எத்தனை மணிக்கு வரும்...?"

"நாம போன் பண்ணி சொன்னா பத்தே நிமிஷத்தில் வாசலுக்கு வந்து நின்னு ஹார்ன் அடிக்கும்..."

"போன் பண்ணுங்க... நான் புடவை மாத்தியாச்சு... அத்தைகிட்டே சொல்லியாச்சு..."

"இதோ பண்றேன்..."

சொல்லிக்கொண்டே மகேந்திரன் டெலிபோனை நெருங்கினான்.

அவன் ரிசீவரை எடுத்து டயல் பண்ணும் முன்னர் அது அலறியது.

எடுத்து காதோரம் வைத்து "ஹலோ..." என்றான்.

"மகேந்திரன்... நான் மேனேஜர் பேசறேன்..."

"சொல்லுங்க ஸார்..."

"எப்போ ஊட்டி கிளம்பறிங்க...?"

"கிளம்பியாச்சு ஸார்... டாக்சிக்கு போன்



பண்றதுக்காக வந்தேன்... அதுக்குள்ளே உங்க கால் வந்தது..."

"உங்க பிரயாணத்தை ஒருமணி நேரம் தள்ளிப்போட முடியுமா...?"

"என்ன விஷயம் ஸார்...?"

"பிகார் ஸ்டீல் ப்ளாண்ட்டில் இருந்து அஃபிஷியல்ஸ் வந்து இருக்காங்க. அவங்க கேக்கற சந்தேகங்களுக்கு நம்ம ஆளுங்ககிட்டே சரியான விளக்கங்கள் இல்லை... நீங்கதான் அவங்களை சமாளிக்க முடியும்ன்னு நினைக்கறேன்... உங்களுக்கே தெரியும்... ஒரு பெரிய ஆர்டர் இவங்க கையெழுத்துப் போட்டாத்தான் நம்ம கம்பெனிக்குக் கிடைக்கும்... ஜஸ்ட் ஒரு மணி நேரம் நீங்க அவங்களோட பேசினா பரவாயில்லை..."

"இப்ப வர்றேன் ஸார்..."

ரிசீவரை வைத்தான் மகேந்திரன்.

"யாரு...?" என்றாள் சந்தியா.

அவன் விஷயத்தைச் சொல்ல – கண்கள் நிறைய கவலை காட்டினாள் அவள்.

"ஏன் நமக்கு இப்படித் தடங்கல் மேல தடங்கலா வருதுன்னு எனக்குப் புரியலை..."

"டோண்ட் பி சில்லி... பொறுப்பான பதவியில் இருக்கேன்... என்னை இப்படி திடீர் திடீர்ன்னு ஆபீஸுக்குக் கூப்பிடறது சகஜமான விஷயம்..."

"எனக்கென்னவோ மனசுக்குள்ளே படபடப்பா இருக்குங்க..."

"நோ செண்ட்டிமெண்ட்ஸ். நான் ஆபீசிலிருந்து வர்ற வரைக்கும் நல்ல பிள்ளையா உக்காந்து டி.வி. பார்த்துட்டிரு..."

சந்தியாவின் கன்னத்தைத் தட்டிச் சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

யமஹாவை உதைத்தான்.

சாலையில் விரைகிறபோது மனச்சுவரில் சந்தியாவின் கவலையான பிம்பம் விழுந்தது.

'ஏன் இந்தப் பெண்கள் தொட்டதற்கெல்லாம் உணர்ச்சிமயமாகிப் போகிறார்கள்...?'

'அவளுக்காகவாவது சீக்கிரம் திரும்ப

வேண்டும்...'

ஆக்ஸிலேட்டரைத் திருகி பைக்கின் வேகத்தை அதிகரித்தான்.

அந்தக் குறுகலான சந்தில் திரும்பும்போது எதிர்பாராதவிதமாய் ராட்சஸ முகத்துடன் எதிர்ப்பட்டது அந்த லாரி.

லாரியும் கணிசமான வேகத்தில் வந்திருக்க வேண்டும். பைக்கின் வேகத்தைக் குறைக்க வேண்டும் என்று மகேந்திரன் முடிவெடுக்கும் முன்பாக லாரியின் சக்கரங்கள் அவனை சமீபித்திருந்தன.

தட்டட்...

பெரிய சத்தம்.

சில விநாடிகளுக்குள் மகேந்திரன் காற்றில் தூக்கி எறியப்பட்டு தலைகுப்புற தரையில் விழுந்தான். சாலையோரக் கல் ஒன்றின் மேல் அசுர வேகத்துடன் மோத -

சுற்றிலும் ரத்தாபிஷேகம் நடந்து சிதறிப் போனான் மகேந்திரன்...

## 7

போஸ்ட்மார்ட்டத்துக்குப் பிறகு மகேந்திரனை மூட்டையாய்க் கட்டிக் கொடுத்திருந்தார்கள்.

அவன் அம்மா ஒரு புறமும், சந்தியா ஒரு புறமும் மேலே விழுந்து பலமாய்க் கதறினார்கள்.

அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் சமாதான முயற்சிகள் இருவரிடமும் எடுபடவில்லை.

அந்த நிமிஷம் வாசலில் ஆட்டோ சப்தம்.

தகவல் கிடைத்து சுகவனமும், பாகீரதியும் வந்து சேர்ந்திருந்தார்கள். ஆட்டோவை விட்டு இறங்கும்போதே பதட்டத்தோடும், தடுமாற்றத்தோடும் தெரிந்தார்கள்.

சுகவனம் ஓரளவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்.

பாகீரதி விசும்பலோடே வீட்டுக்குள் நுழைந்தாள்.

நீளமாய்க் கிடக்கும் மகேந்திரனையும், அருகே



கதறிக் கொண்டிருக்கும் சந்தியாவையும் பார்த்ததுமே உடைந்து போய் வீறிட்டு அழ ஆரம்பித்தாள்.

சந்தியாவை நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு விம்மினாள்.

''தெரிஞ்சே உன் வாழ்க்கையைப் பாழாக்கின பாவி ஆயிட்டேனே...!''

அத்தனை துக்கத்திற்கிடையேயும் சந்தியாவின் காதுக்குள் அந்த வாக்கியம் ஈட்டி மாதிரிப் பாய்ந்து பதிந்தது.

## 8

ஒரு மாத காலம் கம்ப்யூட்டரின் வேகத்தில் நகர்ந்திருந்தது.

சந்தியா ஆபீஸ் ரிசப்ஷனில் காத்திருந்தாள்.

அவளுக்கு எல்லாமே கனவு மாதிரி இருந்தது. நாலே நாள் கல்யாண வாழ்க்கை. அதிலும் இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் கழிந்துவிட்டது.

மீண்டும் இந்த ஆபீஸ் வாயிலை இந்த நிலைமையோடு மிதிப்போம் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

நேர் எதிரே இருந்த ரிசப்ஷனிஸ்ட் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்த டெலிபோன் அழைப்புகளிலேயே கவனமாயிருந்தாள்.

அந்த விநாடி - டெலிபோன் கால்கள் ஓய - சந்தியாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ஜஸ்ட் ஏ மினிட் சந்தியா... ஜீயெம்கிட்டே இருந்து இன்னமும் ரிப்ளை வரலை... நீ வந்திருக்கேன்னு சொல்லிட்டேன்... அவர் கூப்பிட்டதும் நீ உள்ளே போகலாம்...''

''நான் காத்திருக்கேன்...''

''உன்னோட கணவர் இறந்த தகவலைக் கேள்விப்பட்டப்ப எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்தது...''

''என்னோட தலையெழுத்து அப்படி இருந்தா யார் மாத்த முடியும்...''

''அவர் ரொம்ப வேகமா அன்னிக்கு பைக்கில்

போனார் அப்படின்னு சொன்னாங்க... அளவான வேகத்தில் போயிருந்தா விபத்தைத் தவிர்த்திருக்கலாம்..."

"இப்போ நம்ம மனசை சமாதானப்படுத்திக்க ஆயிரம் காரணங்கள் சொல்லிக்கலாம்... தப்பு என்மேல இருக்கறப்ப அவர் வேகமாப் போனதையும் மெதுவாப் போனதையும் அவர் இறந்ததுக்கான காரணங்களா சொல்றது அபத்தம்..."

"என்ன சொல்ற... உன்மேல என்ன தப்பு...?"

"என்னோட ஜாதகத்தில் 'பித்ருமூர்க்க தோஷம்' இருக்கு. அது கணவனோட உயிரை அடிச்சுப் போட்டுரும்..."

"சந்தியா... நீயா இப்படிச் சொல்லறே...? இந்த மாதிரி மூட நம்பிக்கைகளெல்லாம் உனக்குக் கொஞ்சமும் கிடையாதே..."

"மூட நம்பிக்கைங்கற முத்திரை குத்தி நமக்குத் தெரியாத விஷயங்களைப் பழிக்கறதும் அலட்சியப் படுத்தறதும் தப்புன்னு இப்போ நான் உணர்ந்திருக்கேன்..."

"நீ சொல்றதை என்னால் ஏத்துக்க முடியலை..."

"அனுபவம் வாய்ஞ்ச ஒரு ஜோதிடர் சொன்னதை என்னோட அம்மா ஏத்துக்காமப் போனதாலதான் இன்னிக்கு எனக்கு இப்படி ஒரு நிலைமை... எனக்கு இப்படி ஒரு தோஷம் இருக்கற விஷயத்தை என்கிட்டேயே மறைச்சிட்டாங்க... அன்னிக்கு சாவு வீட்டில் துக்கத்தில் தன்னை மறந்து இந்த விஷயத்தை வெளியே கொட்டிட்டாங்க... பின்னாடி நான் துருவித் துருவிக் கேட்டு எல்லாத்தையும் தெரிஞ்சிக்கிட்டேன்..."

"இப்போ நீ எங்கே இருக்கே...?"

"எங்க வீட்டில்தான்..."

"எங்க வீட்டில்ன்னா...?"

"அம்மா வீட்டில்தான்... அவரோட அம்மா டெல்லில இருக்கும் அவங்களோட அண்ணன் வீட்டுக்குப் போய்ட்டாங்க... இங்கே இருந்தா துக்கம் ஒவ்வொரு நாளும் அதிகமாய்ட்டே இருக்கும்... இடமாறுதல் தேவைன்னு நினைச்சு அங்கே



போய்ட்டாங்க... என்னையும் கூப்பிட்டாங்க... ஆனா நான் போகலை..."

"ஏன்...?"

"நாலு நாள் பந்தத்தைக் காரணம் காட்டி தெரியாத இடத்தில் அவங்களுக்கு சுமையா இருக்க விரும்பலை..."

"உன்னோட முடிவு சரியான முடிவு..."

அவள் சொன்ன விநாடி இன்டர்காம் கிணுகிணுத்தது.

எடுத்துப் பேசினவள்... ரிசீவரை வைத்துவிட்டு சந்தியாவிடம் சொன்னாள்.

"ஜீயெம் கால்ஸ் யு ..."

பளிங்குத் தரை வராந்தாவில் நாலைந்து கதவுகளைக் கடந்து செல்ல - பித்தளை எழுத்துக்கள் மஞ்சளாய் மின்னின.

"GENERAL MANAGER" கதவைத் தட்டி, "எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..." என்றாள்.

"கமின்..."

குரலைக் கேட்டுத் திகைத்தபடி உள்ளே நுழைந்தாள் சந்தியா.

'மேனேஜர் பரஞ்சோதியின் குரல் மாதிரித் தெரியவில்லையே...?'

மேனேஜர் இருக்கையில் சோடாபுட்டி தடிமனில் கண்ணாடி அணிந்த புதிய நபர் உட்கார்ந்திருந்தார்.

அவளை மேலிருந்து கீழ்வரை பார்த்து, "எஸ்..." என்றார்.

"ஸார்... மேனேஜர் பரஞ்சோதி..."

"அவர் ஹெட் ஆபீஸ் ட்ரான்ஸ்பர் ஆகிப்போய் மூணுவாரம் ஆச்சு... இப்போ நான்தான் இங்கே ஜெனரல் மேனேஜர்... என்ன விஷயம் சொல்லு..."

"ஸார்... மை நேம் ஈஸ் சந்தியா... இங்கேதான் வேலை பார்த்திட்டிருந்தேன்... கல்யாணம் முடிவானதால் வேலையை ராஜினாமா பண்ணிட்டேன்..."

"ஷீலா சொன்னா..."

"துரதிர்ஷ்டவசமா கல்யாணம் ஆன நாலாம் நாளே

கணவரை இழந்துட்டேன் ஸார்... இப்போ மறுபடியும் வேலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கேன்...''

பட்டென்று அவரிடமிருந்து பதில் தெறித்தது.

''இப்போ வேலை எதுவும் காலி இல்லைம்மா... உன்னோட போஸ்ட்டுக்கு வேற ஆள் எடுத்தாச்சு...''

## 9

சந்தியா காலிங்பெல் சுவிட்சை அழுத்தினாள்.

கதவைத் திறந்த சஞ்சய்யின் அம்மா புன்னகைத்து வரவேற்றாள்.

''வாம்மா சந்தியா...''

''சஞ்சய் அண்ணா இருக்காங்களா...?''

''இப்போதான் ஆபீஸிலிருந்து வந்தான்... உள்ளே வா...''

லுங்கியை இறுக்கிக் கொண்டே உள்ளறைக்குள் இருந்து வெளிப்பட்டான் சஞ்சய்.

''அண்ணா... உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்...''

''உட்கார் சந்தியா...'' சோபாவைக் காட்டினான்.

அவள் உட்கார்ந்தபின் கேட்டான்.

''என்ன விஷயம்... சொல்லு...''

''நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணனும்...''

''என்ன உதவி...?''

''நான் மறுபடியும் வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்...''

''நல்ல முடிவு... வீட்டுக்குள்ளே சும்மா உக்காந்திருந்தா துக்கம் அதிகமாகுமே ஒழிய குறையாது...''

''உங்களுக்குத் தெரிஞ்ச கம்பெனியில வேலை காலி இருந்தா எனக்கு சிபாரிசு பண்ணி வாங்கித் தரணும்...''

''உனக்கு நான் சிபாரிசு பண்ணனுமா...? நல்ல கதையா இருக்கே... என்னோட ஃப்ரெண்டோட தங்கச்சிக்கு நீ ரெக்கமண்ட் பண்ணி வேலை



வாங்கித் தந்தே... ஞாபகம் இருக்கா...?''

''மேனேஜர் பரஞ்சோதி இருந்தப்போ என் பேச்சுக்கு மதிப்பு இருந்தது... புதுசா வந்திருக்கிற மேனேஜர் 'உன்னோட போஸ்ட்டுக்கு ஆள் எடுத்தாச்சும்மா... அப்ளிகேஷனை ஆபீஸ்ல தந்துட்டுப் போ... வேலை காலியிருக்கறப்போ தபால் போடறோம்'ன்னு சிம்ப்பிளா சொல்லி அனுப்பிட்டார்...''

''நீ அவசரப்பட்டு வேலைய ராஜினாமா பண்ணியிருக்கக் கூடாது சந்தியா...''

'' 'லீவ் போடும்மா... ராஜினாமா பண்ண வேண்டாம்'ன்னு மேனேஜர் பரஞ்சோதி அன்னிக்கே சொன்னார்... நான்தான் கேக்கலை... இப்படியெல்லாம் ஆகும்ன்னு நான் கனவில்கூட நினைச்சுப் பார்க்கலைண்ணா...''

''பழசை மறந்துடு... மொதல்ல ஒரு வேலை தேடிக்க... கொஞ்சநாள் ஆச்சுன்னா எல்லாமே சரியாப் போயிடும்... அப்புறமா ஒரு நல்ல வரனாப் பார்த்து ஒரு புது வாழ்க்கையை நீ தொடங்கணும்...''

''நோ...''

''என்ன நோ...?''

''போதும்... எனக்கு இன்னொரு வாழ்க்கை வேண்டாம்...''

''உணர்ச்சிபூர்வமாப் பேசாதே... அறிவுபூர்வமாப் பேசு... ரெண்டு நாள் வாழ்க்கையை மனசில பதிச்சிக்கிட்டு உன் எதிர்காலத்தையே பாழாக்கிக்கறது முட்டாள்த்தனம்...''

''நான் வேண்டாம்ன்னு சொல்லறதுக்கு அதுமட்டும் காரணம் இல்லைண்ணா... இன்னொரு உயிரைப் பலிதர நான் விரும்பலை...''

''ஜோதிடர் சொல்லிட்டுப் போன தோஷத்தைச் சொல்றியா...? காக்கை உக்கார பனம்பழம் விழுந்திருக்கு. மகேந்திரனின் மரணம் தற்செயலா நேர்ந்தது சந்தியா...''

''ரெண்டு தற்செயல்களுக்கு சாத்தியமில்லை... மணவறையிலேயே சாவை சந்திச்சிட்டு தப்பிச்சிருக்கார்... என் கழுத்தில் தாலிகட்டின

நிமிஷத்திலிருந்தே மரணம் அவரைத் துரத்த ஆரம்பிச்சிருக்குண்ணா...''

அவன் அம்மா தட்டில் காபி கொண்டுவர – சஞ்சய் அம்மாவிடம் திரும்பி கவலையோடு சொன்னான்.

''அம்மா...! சந்தியா சொல்றதைக் கேட்டீங்களா...? ஜோசியத்தை நம்பி வாழ்க்கையையே பாழாக்கிக்க துணிஞ்சுட்டா...''

அம்மா மெலிதாய்ப் புன்னகைத்தாள்.

''சஞ்சய்... இன்னொரு கல்யாணத்தைப்பத்தி இவகிட்டே பேச இது நேரமில்லை...''

''பின்னே...?''

''ஒரு பொண்ணுக்கு கணவனின் இழப்புங்கறது மனசை ஆழமா பாதிக்கிற விஷயம்... எத்தனை நாள் அவனோட குடும்பம் நடத்தினாங்கறது முக்கியமில்லை... அந்த பாதிப்பில் இருந்து அவ மீண்டு வர இன்னும் கொஞ்சம் கால அவகாசம் கண்டிப்பாத் தேவை... அதுக்கப்புறமா பேசி அவளைக் கன்வின்ஸ் பண்ணலாம்...''

வேகமாய் தீவிரக் குரலில் சொன்னாள் சந்தியா.

''எத்தனை நாளானாலும் சரி... என்னோட முடிவில் எந்த மாற்றமும் இருக்காது...''

## 10

அந்த நாளின் காலை பத்துமணிக்கு வாசலில் தபால்காரனின் குரல் கேட்டு வெளியே வந்தாள் சந்தியா.

''உங்களுக்கு ஒரு பதிவுத் தபால் வந்திருக்கும்மா...''

சொல்லிக்கொண்டே போஸ்ட்மேன் கட்டைப் பிரித்து அந்த வெண்ணிற உறையை வெளியே எடுத்தார்.

பாரத்தில் அவள் கையெழுத்திட வேண்டிய இடத்தில் பெருக்கல் குறியைப் போட்டு அவளிடம் நீட்டினார்.

சந்தியா அவர் நீட்டிய பால்பாயிண்ட் பேனாவை அந்த பாரத்தில் கிறுக்கலாய் நகர்த்தினாள்.



கவரைத் தந்துவிட்டு அவர் விடை பெற்றார்.

கவரை அப்படியும் இப்படியும் புரட்டி ஃப்ரம் அட்ரஸைத் தேடினாள்.

பாகீரதி கேள்வியோடு சமையலறையிலிருந்து வந்தாள்.

''சந்தியா... யார் லெட்டர் போட்டிருக்காங்க...?''

கவரின் இடது மூலையில் பளிச்சென்று அவளின் பழைய கம்பெனியின் விலாசம் அச்சிடப்பட்டிருந்தது.

''நான் வேலை பார்த்த கம்பெனியிலிருந்துதான் லெட்டர் வந்திருக்கு...''

''என்னவாம்...?''

''தெரியலை...''

பரபரப்பாய் உறையின வாயை உடைத்தாள் சந்தியா.

உள்ளே இருந்த மடிக்கப்பட்ட வெள்ளைத்தாளை விரித்தாள். எலக்ட்ரானிக் டைப்ரைட்டரின் உபயத்தில் அழகாக ஆங்கில எழுத்துக்கள் ஓடியிருந்தன.

எழுத்துக்களை கண்களில் வாங்கினாள்.

பாகீரதி எட்டிப் பார்த்தாள்.

''என்ன போட்டிருக்காங்க சந்தியா...?''

படிக்கப் படிக்க சந்தியாவின் முகம் மலர்ச்சிக்குப் போவதைப் பார்த்துவிட்டு சற்றே ஆர்வத்தோடு கேட்டாள் பாகீரதி.

சந்தியா முகத்தில் வெளிச்சப் புன்னகையைப் படரவிட்டபடி சொன்னாள்.

''என்னை வரச்சொல்லி லெட்டர் போட்டிருக்காங்கம்மா... ஜீயெம்மைப் போய் உடனே நான் சந்திக்கணுமாம்...''

''எதுக்கு...?''

''வேலை காலியானா தகவல் தர்றேன்னு ஜீயெம் அன்னிக்கு சொன்னார்... என்னை தட்டிக் கழிக்கறதுக்காக அப்படிச் சொல்றாரோன்னு நான் நினைச்சேன்... ஆனா இப்ப லெட்டர் வந்திருக்கறதைப் பார்க்கிறப்போ வேகன்ஸி ஏற்பட்டு என்னைக் கூப்பிடிருக்காங்கன்னு நான் நினைக்கறேன்...''

''உடனே அவரைப் போய்ப் பாரு... வீட்டில் சும்மா இருக்க முடியலைன்னு புலம்பித் தீர்த்தியே...''

''இதோ கிளம்பியாச்சு...''

பதினைந்தே நிமிஷங்களில் புறப்பட்டாள் சந்தியா. சாம்பல் நிறத்தில் செல்ஃப் டிசைன் ஓடும் வெண்ணிற காட்டன் புடவைக்குள் தன்னைத் திணித்திருந்தாள்.

தெருமுனையில் ஆட்டோ பிடித்தாள்.

இடத்தைச் சொல்லிவிட்டு இருக்கையில் சாய, குலுங்கிக் கொண்டே ஓடிப்போய் அவளை அலுவலகத்தில் சேர்த்தது.

ரிசப்ஷனிஸ்ட் ஷீலாவிடம் விஷயத்தைச் சொல்ல இந்தமுறை அதிகநேரம் காக்க வைக்கப் படவில்லை.

ஜீயெம் அறைக்கு பிரவேசித்தாள்.

அவர் புன்னகைத்து இருக்கை காட்டினார்.

''உக்காரம்மா...''

''தாங்க்யூ ஸார்... இங்கிருந்து லெட்டர் வந்தது...''

அவர் தலையசைத்தார்.

''ஆமாம்மா... நான்தான் அனுப்பினேன்...''

''வேகன்சி வந்தா தகவல் அனுப்பறேன்னு சொன்னிங்க... வேகன்சி வந்திருக்கா ஸார்...?''

இடம் வலமாய்த் தலையசைத்து மறுத்தார் அவர்.

''இல்லைம்மா. வேகன்சி எதுவும் இல்லை...''

உற்சாகமெல்லாம் விநாடிக்குள் அஸ்தமித்துப் போக அவரை பலஹீனமான பார்வையில் பார்த்தாள்.

''அப்படின்னா என்னை உடனே வந்து சந்திக்கும்படியா எதுக்காக ஸார் லெட்டர் அனுப்பியிருக்கீங்க...?''

அவர் புன்னகைத்தார்.

''அன்னிக்கு நீ வந்தப்போ... உன்னைப்பத்தி சரியாத் தெரிஞ்சுக்காம உன்னையும் பத்தோட பதினொண்ணா நினைச்சு திருப்பியனுப்பிட்டேன்... நீ ரொம்பத் திறமைசாலின்னும் உன்னோட வேலையை சிறப்பா பண்ணிட்டு வந்திருக் கேன்னும் இப்போ தெரிஞ்சிக்கிட்டேன்...''



''என்னைக் கூப்பிட்டனுப்பினதுக்கான காரணத்தை நீங்க சொல்லலியே ஸார்...?''

''அதைத்தான் சொல்ல வர்றேன்... மேனேஜர் பரஞ்சோதியை போன வாரம் மீட் பண்ணினேன்...''

சந்தியா சட்டென மலர்ந்து போய் அவரை ஏறிட்டாள்.

''அப்படியா ஸார்...? அவர் என்ன சொன்னார்...?''

''நீ இங்கே அப்ளிகேஷன் தந்துட்டுப் போன விஷயம் அவர் காதுக்குப் போயிருக்கு... உன்னைப்பத்தி ஓகோன்னு புகழ்ந்தார்... டெப்யூட்டேஷன்லதான் அவர் ஹெட் ஆபீஸ் போயிருக்கார்... திரும்ப இங்கே வந்திருவார்... அவர் இங்கே வர்றப்போ நீ இந்த ஆபீஸ்ல இருக்கணும்ன்னு சொன்னார்...''

சந்தியா ஆச்சர்யமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க - அவர் தொடர்ந்தார்.

''உன்னோட ட்ராக் ரெக்கார்ட்ஸை மேனேஜ்மென்ட்கிட்டே காட்டிப் பேசிட்டார் போலிருக்கு... தற்சமயத்துக்கு வேகன்சி எதுவும் இல்லைன்னாலும் ஒரு வேகன்சி க்ரியேட் பண்ணி உன்னோட திறமையை உபயோகிச்சுக்க உனக்கு லெட்டர் அனுப்பச் சொல்லி ஏ.ஓ.வுக்கு ரெக்கமண்ட் பண்ணினேன்...''

சந்தோஷத்தில் பிரகாசமானாள் சந்தியா.

''தாங்க்யூ வெரிமச் ஸார்...''

''எப்ப ஜாயின்ட் பண்ணறே...?''

''நாளைக்கே நான் ட்யூட்டியில ஜாயின் பண்றேன் ஸார்...''

உற்சாகமாய் விடை பெற்றாள்.

ஏ.ஓ.வில் தகவலைப் பரிமாறிவிட்டு ரிசப்ஷனிஸ்ட் ஷீலாவிடமும் சந்தோஷத்தைப் பகிர்ந்தாள்.

''ரியலி மேனேஜர் பரஞ்சோதிக்கு நான் தாங்க்ஸ் பண்ணனும் ஷீலா...''

''இப்ப நீ பண்ண விரும்பறியா...?''

புன்னகையோடு கேட்டாள் ஷீலா.

''என்ன சொல்றே...?''

"மேனேஜர் பரஞ்சோதி ஈஸ் ஆன் த லைன்... பர்ச்சேஸ்ஆபீசரோட பேசிட்டிருக்கார்... பேசி முடிச்சதும் கட்பண்ணாம உன்கிட்டே தர்றேன்..."

"குடு ஷீலா..."

ஆர்வத்தோடு டெலிபோனை பார்த்தாள் சந்தியா.

மேனேஜர் பரஞ்சோதி அலுவலக விஷயங் களைப் பல்வேறு டிபார்ட்மெண்ட்டிலும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருக்க - பொறுமையோடு காத்திருந்தாள்.

அந்த நிமிஷம் ஷீலா சந்தியாவிடம் ரிசீவரை நீட்டினாள்.

"சந்தியா பேசு..."

சந்தியா அதை வாங்கிக் காதில் வைத்தாள். சற்றே நெகிழ்ந்த குரலில் அவரிடம் பேச ஆரம்பித்தாள்.

"ஸார்! உங்க சிபாரிசினால மறுபடி எனக்கு இங்கேயே வேலை கிடச்சிருக்கு..."

"அது உன்னோட திறமைக்கும், சின்சியாரிட் டிக்கும் கிடைச்ச பரிசும்மா... அதைவிடு... உன்னோட கல்யாண வாழ்க்கை இத்தனை கோரமா முடிஞ்சதைக் கேள்விப்பட்டு நான் ஒரு நாளெல்லாம் அப்செட் ஆயிட்டேன்..."

"அந்த கசப்பான சம்பவங்களை மறக்கத்தான் ஸார் நான் மறுபடியும் வேலையில் சேர முயற்சி பண்ணினேன்... என்னோட அவசர முடிவுக்கு நல்ல பாடம் கிடைச்சது... இங்கே எனக்கு வேலை இல்லைன்னு சொல்லிட்டாங்க... வேற இடங்களிலும் வேலை கிடைக்கறது கஷ்டமா இருந்தது... நல்ல வேளையா நீங்க என்னை மறக்காம நினைவில் வெச்சிருந்து உதவி செஞ்சிங்க... உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை ஸார்..."

"நன்றி எனக்கு சொல்ல வேண்டாம் சந்தியா... சஞ்சய்க்கு சொல்லு..."

"சஞ்சய் அண்ணாவுக்கா...? என்ன ஸார் சொல்றிங்க...?"

"அவர்தான் ரெண்டு வாரத்துக்கு முன்னால் என்னை டெலிபோனில் தொடர்பு கொண்டு



பேசினார்... 'என்ன ஸார் உங்க கம்பெனியில் சின்சியாரிட்டிக்கும், திறமைக்கும் கிடைக்கற மரியாதை இவ்வளவு தானா? சந்தியாவுக்கு வேலை இல்லைன்னு சொல்லித் திருப்பி அனுப்பிட்டிங்களே...?' அப்படின்னு கேட்டு நீ திரும்ப வேலைக்காக மனுப்போட்ட விபரத்தைச் சொன்னார்... அப்புறம்தான் நான் உனக்காக நிர்வாகத்திடம் பேசினேன்... நிர்வாகத்தின் தரப்பிலிருந்து எந்தப் பிரச்னையும் இல்லை... ஏன்னா உன்னோட ட்ராக் ரெக்கார்டஸ் அந்த மாதிரி... சுத்தமா இருந்தது... இனிஷியேட் பண்ணினது மிஸ்டர் சஞ்சய்தான்... என் பங்கு இதில் குறைவுதான்... அதனால நீ நன்றியை அவருக்குச் சொல்றதுதான் முறை..."

சந்தியா ஆச்சரியத்தோடு ரிசீவரை வைத்தாள்.

## 11

சந்தியா வேலையில் சேர்ந்த நான்காவது வாரத்தில் மேனேஜர் பரஞ்சோதி டெப்யுட்டேஷன் முடிந்து திரும்பி வந்துவிட்டார்.

அந்த நாளின் சாயந்தரம் சிட்டி கான்பரன்ஸ் ஹாலில் நடந்த செமினாரை முடித்துக் கொண்டு ஆபீஸ் திரும்பியவர் இண்டர்காமை சுழற்றினார்.

"குட்ஈவினிங் ஸார்..."

ஷீலாவின் குரல்.

"யாராவது விசிட்டர்ஸ் இருக்காங்களா...?"

"நோ ஸார்..."

"எனி கால்ஸ்...?"

"ஏரோஸ்பேஸ் மேனேஜிங் டைரக்டர் போன் பண்ணினார் ஸார்..."

"மெஸேஜ் என்ன குடுத்தார்...?"

"சப் கான்ட்ராக்ட் விஷயமா உங்களோட பேச விரும்பறதா சொன்னார்..."

"நாளைக்கு ஃபாஸ்ட் கால் அவருக்குப் போட்டுக் குடு... மறந்துடாதே..."

"ஓகே ஸார்..."

''வேற யார் பேசினா...?''

''நோ மோர் கால்ஸ் ஸார்...''

பரஞ்சோதி ரிசீவரை வைத்தார்.

யாரையோ எதிர்பார்க்கிறாற்போல் சற்று நேரம் வாட்சைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

ஐந்து நிமிஷங்கள் கரைந்திருக்க - கதவு லேசாகத் திறந்து ''எக்ஸ் க்யூஸ்மி ஸார்...'' என்ற ஆண்குரல் கேட்டது.

''கமின்...''

பரஞ்சோதி குரல் தந்ததைத் தொடர்ந்து உள்ளே பிரவேசித்தான் சஞ்சய்.

அவர் உற்சாகமான முகத்தோடு அவனைப் பார்த்தார்.

''வாங்க மிஸ்டர் சஞ்சய்... ஹவ் ஆர் யூ...?''

''ஃபைன் ஸார்...''

''உக்காங்க ப்ளீஸ்...''

அவர் எதிர் இருக்கையைக் கை காண்பிக்க அதில் தன்னை அமர்த்தினான் சஞ்சய்.

''நீங்க எப்போ இங்கே வந்திங்க ஸார்...?''

''கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆச்சு...''

''ரெண்டாவது தடவையா நான் உங்களை சந்திக்கறேன்னு நினைக்கறேன் ஸார்... என் ஃப்ரெண்டோட தங்கைக்கு வேலை கேட்டு சந்தியா மூலமா உங்களை சந்திச்சேன்...''

''அன்னிக்கு ஒரு அப்ளிகேஷனோட நீங்க என்னை வந்து பார்த்திங்க... இன்னிக்கு ஒரு தேவைக்காக நான் உங்களை வரவழைச்சிருக்கேன்...''

சற்றே குழப்பமாய் அவர் முகத்தைப் பார்த்தான்.

''யுனிவர்சிட்டிக்கு போன் பண்ணி என்னை சாயந்தரம் வரச் சொன்னிங்க. அப்போ இருந்தே என் மனசுக்குள்ளே எதுக்காக வரச் சொன்னிங்கங்கற கேள்வி அரிச்சிட்டே இருந்தது...''

''சந்தியா சம்பந்தமாகப் பேசத்தான் உங்களை வரச் சொன்னேன்...

சஞ்சய் மேலும் குழப்பத்தைத் தரித்துக் கொண்டு



அவரை பார்த்தான்.

''சந்தியா சம்பந்தமாவா...?''

''எஸ்...''

''என்ன பேசணும் ஸார்...?''

''கல்யாணமாகி நாலே நாளில் அவ கணவரைப் பறிகொடுத்திருக்கா... இது எவ்வளவு பரிதாபகரமான விஷயம்...''

''ரியலி பிட்டி ஸார்...''

''அவ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கக்கூடாது...?''

நிமிர்ந்து அவரைப் புன்னகையோடு பார்த்தான் சஞ்சய்.

''இதையேதான் நானும் என் அம்மாவும் மூணு மாசம் முன்னாடியே சந்தியாவை வெச்சிக்கிட்டே பேசினோம்... அவ பிடிவாதமா மறுத்தா... நடந்த துக்கத்திலிருந்து சந்தியா மீள அவகாசம் வேணும்... பின்னாடி பேசிக்கலாம்ன்னு அப்போ என்னோட அம்மா சொன்னாங்க...''

''சந்தியா இந்நேரம் சகஜ நிலைக்கு வந்திருப்பாள்ன்னு நான் நினைக்கறேன்...''

''அவள் சகஜ நிலைக்கு வந்திருந்தாலும் இதில் இன்னொரு சிக்கல் இருக்கு ஸார்...''

''என்ன சிக்கல்...?''

''தன்னோட கணவனின் அகால மரணத்துக்கு தன் ஜாதகத்தில் உள்ள கோளாறுதான் காரணம்ன்னு சந்தியா பலமா நம்பறா...''

''மூட நம்பிக்கை...''

''அவ ஆரம்பத்தில் அப்படித்தான் நினைச்சிருந்தா... ஆனா அவளோட கணவர் தாலியைக் கட்டின கொஞ்ச நேரத்திலேயே உயிருக்கு ஆபத்தான நிலைமையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அதிலிருந்து மீண்டு மறுபடியும் ஒரு விபத்தில் சிக்கி உயிரைப் பறிகொடுத்தார்... அதனால தப்பு தன் ஜாகத்தில்தான் இருக்குன்னு அவ தீவிரமா நம்ப ஆரம்பிச்சிட்டா...''

''காக்கை உக்கார பனம்பழம் விழுந்த கதைதான்... வேற ஜோதிடர்கள்கிட்டே ஜாதகத்தைக் காட்டிப்

பார்த்தாங்களா சஞ்சய்...?"

"நாலைஞ்சு ஜோதிடர்கள்கிட்டே காட்டியாச்சு... எல்லாருமே அவளுக்கு அப்படி ஒரு தோஷம் இருக்கறதைத் தயங்கித் தயங்கி சொல்லிட்டாங்க..."

"ஒரு தோஷம் இருந்தா அதுக்குப் பரிகாரம் கண்டிப்பா இருக்கணுமே...?"

"இவ விஷயத்தில் பரிகாரமே இல்லைன்னுட்டாங்க..."

"நீங்க இதையெல்லாம் நம்பறிங்களா மிஸ்டர் சஞ்சய்...?"

"என்னால நம்பவும் முடியலை... நடந்த சம்பவங்களைப் பார்க்கிறப்போ நம்பாம இருக்கவும் முடியலை..."

"எனக்கு இதிலெல்லாம் சுத்தமா நம்பிக்கை கிடையாது... ஆக்சிடென்ட்டலா நடந்த சம்பவங்களைத் தொடர்புபடுத்தி வீண் பயத்தை மனசில் சுமக்கறாங்க... அதனால பாதிக்கப்படறது சந்தியாதான்... அவ வாழ்க்கை அநாவசியமா வீணாகறதில் எனக்கு கொஞ்சம்கூட விருப்ப மில்லை... இதையெல்லாம் மூட நம்பிக்கைன்னு ஒதுக்கித் தள்ளறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க... அப்படி ஒரு நல்ல ஆளைத் தேர்ந்தெடுத்து... அவளுக்கு கல்யாணம் பண்ணி வெக்கணும்ங்கறதுதான் என்னோட எண்ணம்..."

"சந்தியாவோ அவளோட அப்பா அம்மாவோ இதுக்கு ஒத்துக்குவாங்களா ஸார்...?"

"உங்களை நான் அழைச்சுப் பேசறது ஏன் தெரியுமா...? சந்தியாவோட வாழ்க்கை நல்லா அமையணும்ங்கற நல்லெண்ணம் என்னைப் போலவே உங்களுக்கும் இருக்கு... என்னோட மும்பை ஆபீஸ் போன் நெம்பரைத் தேடிப் பிடிச்சு அவளோட தற்போதைய நிலைமையை எனக்குச் சொல்லி வேலைக்கு ஏற்பாடு செஞ்சப்பவே அதை நான் புரிஞ்சிக்கிட்டேன்... அவங்க குடும்ப நண்பர்ங்கற முறையில் அவங்களோட பேசி உங்களால சம்மதிக்க வைக்க முடியும்..."

"அப்படியே அவங்க சம்மதிச்சாலும் நாம



நினைக்கறா மாதிரி ஒருத்தர் கிடைப்பாரா ஸார்...? ஜாதகம் ஜோசியம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லைன்னு வீராப்பா பல பேர் சொல்லுவாங்க... ஆனா தனக்குன்னு வர்றப்போ யோசிக்க ஆரம்பிச்சிடுவாங்க..."

பரஞ்சோதி சிரித்தார்.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டவே வேண்டாம். ஏன்னா... சந்தியாவைக் கல்யாணம் பண்ணிக்க ஒருத்தன் தயாரா இருக்கான்..."

சந்தோஷ வெளிச்சம் பரவிய முகத்தோடு அவரைப் பார்த்தான் சஞ்சய்.

"ஸார்... நிஜமாவா சொல்றிங்க...?"

"எஸ்..."

"அவளுக்கிருக்கும் தோஷம் பத்தியெல்லாம் அவருக்குத் தெரியுமா...?"

"எல்லாமே தெரியும்... அதையெல்லாம் நம்பக்கூடிய ஆள் அவனல்ல..."

"யார் ஸார் அது...?"

"இதே கம்பெனியில்தான் வேலை பார்க்கறான்..."

"இஸிட்...?"

"பர்சனல் ஆபீசரா இருக்கான்... ஆபீசைப் பொறுத்த வரைக்கும் என்னோட கண்காணிப்பில் படிப்படியா உயர்ந்த பையன்... நான் சொன்னா தட்டாம கேப்பான்..."

"இது தனிப்பட்ட விஷயம்... வறுபுறுத்தலுக்காகவோ கட்டாயத்துக்காகவோ இப்போ தலையசைச்சுட்டா பின்னாடி ரெண்டு பேர் வாழ்க்கையும் வீணாயிடும்..."

"நோ... நோ... நான் எந்தவிதத்திலும் அவனை கம்ப்பெல் பண்ணலை... அவனேதான் என்கிட்டே சொன்னான்... 'இந்த ஆபீசில் சேர்ந்ததுக்கப்புறம் உங்களைத்தான் காட்பாதரா நினைச்சிருக்கேன்... உங்க வழிகாட்டலின்படிதான் ஒவ்வொரு அடியும் எடுத்து வெச்சேன்... எனக்குன்னு உறவு ஜனங்கள் யாரும் இல்லை... நீங்கதான் எனக்கு அப்பா மாதிரி இருந்து என் கல்யாணத்தை நடத்தித் தரணும்...' அப்படின்னு கேட்டான்... கூடவே தனக்கு

எப்படிப்பட்ட பொண்ணுவேணும்ங்கற கண்டிஷனும் சொன்னான்...''

நிமிர்ந்தான் சஞ்சய்.

''என்ன கண்டிஷனே ஸார்...?''

''ஆதரவற்ற ஒரு விதவைப் பொண்ணுக்கு வாழ்க்கை தர நினைக்கறானாம்... இதைச் சொன்னதும் எனக்கு சந்தியாவோட ஞாபகம்தான் வந்தது... சொன்னேன்... தலையசைச்சுட்டான்...''

சொன்ன பரஞ்சோதி இன்ட்டர்காமை அருகில் இழுத்தபடி தொடர்ந்து பேசினார்.

''ஜஸ்ட் ஏ மினிட்... அவனை நான் கூப்பிடறேன்...''

பொத்தான்களை ஆட்காட்டி விரலால் தொட்டார்.

''பவன்குமார்...? கம் டு மை ரூம்...''

ரிசீவரை வைத்த சற்று நேரத்தில் அந்த பவன்குமார் வந்துவிட்டான்.

சிக்கன மீசையோடு இருந்தான். அளவான உடற்கட்டு. பர்சனல் ஆபீசருக்குரிய தோரணை கண்களில் பதிவாகியிருந்தது. பரஞ்சோதியிடம் நிறைய மரியாதை காட்டினான்.

சஞ்சய்க்கு அவனை அறிமுகப்படுத்தி வைக்க - இருவரும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள்.

சஞ்சய் அவனிடம் பேசினான்.

''உங்களோட மேரேஜ் ப்ரொப்போஸல் பத்தி இவர் சொன்னார்... நான் உங்களை மனசார பாராட்டறேன் மிஸ்டர் பவன்குமார்.''

அவன் அடக்கமாய்ப் புன்னகைத்தான்.

''இன்னிக்கு நான் இவ்வளவு பெரிய பதவியில் மதிப்போட உக்காந்திருக்கேன்னா அதுக்கு முழுக்க முழுக்க காரணம் பரஞ்சோதி ஸார்தான்... அவர் பார்த்து எந்தப் பொண்ணைக் காட்டினாலும் கல்யாணம் பண்ணிக்க நான் ரெடியா இருக்கேன்...''

''அவளோட ஜாதகத்தில் தோஷம் இருக்குங்கற விஷயம் உங்களுக்குத் தெரியுமா...?''

''பரஞ்சோதி ஸார் விபரமா சொன்னார்... அதையெல்லாம் நான் நம்பத் தயாராயில்லை...''

''அப்படின்னா அவளைக் கல்யாணம்



பண்ணிக்கற விஷயத்தில் நீங்க உறுதியான முடிவோடதான் இருக்கிங்க...?''

''எஸ்...'' சொல்லி பலமாய்த் தலையசைத்தான் பவன்குமார்.

சஞ்சய் சந்தோஷ முகத்தோடு பரஞ்சோதியிடம் திரும்பி வார்த்தைகளை வெளியிட்டான்.

''அப்படின்னா ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் சந்தியாவோட அப்பா அம்மாகிட்டே விஷயத்தை உடைச்சு அவங்களை சம்மதிக்க வெக்க முயற்சி பண்றேன் ஸார்...''

''தாங்க்யூ மிஸ்டர் சஞ்சய்...'' என்றார் பரஞ்சோதி.

பவன் குமாரும் மகிழ்ச்சியோடு நன்றியைத் தெரிவித்தான்.

அந்த மகிழ்ச்சிக்கு ஆயுள் கம்மி என்பதை அப்போது அவன் உணரவில்லை.

## 12

சஞ்சய் சந்தியாவின் வீட்டு காலிங்பெல்லை அழுத்தி விட்டுக் காத்திருந்தான்.

சில விநாடிகளுக்குப் பின் கதவு திறந்தது.

பாகீரதி புன்னகைத்து வரவேற்றாள்.

''வா சஞ்சய்...''

ஆன்மீகப் புத்தகம் ஒன்றில் பார்வையைப் போட்டிருந்த சுகவனம் நிமிர்ந்தார்.

''உக்கார்ப்பா...''

அவன் அமர்ந்து கொண்டே கேட்டான்.

''எங்கே சந்தியா...?''

பாகீரதி பதில் சொன்னாள்.

''இப்பதான் கோயிலுக்குக் கிளம்பிப் போனா...''

''திரும்பிவர இன்னும் நேரம் ஆகும் இல்லையா...?''

''எப்படியும் ஒரு மணி நேரம் ஆகும்...''

''நல்லதாப் போச்சு... நான் பேசவந்த விஷயத்தை ஃப்ரீயா பேசி முடிக்கலாம்...''

இருவரும் குழப்பமாய் அவனைப் பார்த்தார்கள்.

''எங்ககிட்டே என்ன பேசணும்... சஞ்சய்...?''

''சந்தியா சம்பந்தமாத்தான்...''

நெற்றியில் வரிகளைத் தீட்டிக்கொண்டு அவனைப் பார்த்தார்கள்.

''அவளைப்பத்தி என்ன பேசனும்...?''

ஒரு சின்ன மவுனத்துக்குப் பின் சொன்னான் சஞ்சய்.

''சந்தியாவுக்கு இன்னொரு கல்யாணம் செஞ்சு வெக்கற மாதிரி அபிப்ராயம் வெச்சிருக்கிங்களா...?''

மெல்லிய அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தார்கள்.

''ச... ஞ்... சய்...?''

''நான் ஏதோ வேண்டாததைக் கேட்டுட்ட மாதிரி ஏன் பதறிப் போறிங்க...?''

சுகவனம் தடுமாற்றத்தோடு பேசினார்.

''சஞ்சய்...! அவளோட ஜாதகக் கோளாறு உனக்குத் தெரிஞ்ச விஷயம்தானே...? ஒரு தடவை அனுபவப்பட்டுட்டோம்... மறுபடி ஒரு விஷப்பரீட்சை செஞ்சு பார்க்கற வலு எங்ககிட்டே இல்லே...''

''அவளை இப்படியே விட்டுரலாம்ன்னு உத்தேசமா...?''

''என்ன பண்றதுன்னு தெரியாம குழப்பத்தில் இருக்கோம் நாங்க... துக்கத்தை மறந்து இப்போதான் அவ சகஜமாகி இருக்கா... இந்த மாதிரி விவாதத்தை எடுத்தா மறுபடி அப்செட் ஆயிடுவா...''

''நான் இப்போ உங்ககிட்டே வந்து இதைப்பத்திப் பேசறதுக்குக் காரணமே... அவளோட மேனேஜர் பரஞ்சோதிதான்...''

''என்ன சொல்றே சஞ்சய்...?''

''அவர் இன்னிக்கு என்னைக் கூப்பிட்டுப் பேசினார்...''

''என்ன பேசினார்...?''

''உங்க குடும்பத்தோட நெருங்கிப் பழகறவன்ங்கற முறையில் என்கிட்டே விசாரிச்சார்... சந்தியாவுக்கு இன்னொரு கல்யாணம் செய்யறதைப்பத்தி அபிப்ராயம் ஏதாவது இருக்கான்னு தெரிஞ்சிட்டு வரச் சொன்னார்...''

''திடீர்ன்னு அவர் ஏன் உன்னைக் கூப்பிட்டு இதைக் கேட்டார்...''

''அவர் அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து



வெச்சிருக்கார்...''

பாகீரதியும், சுகவனமும் திகைப்புடன் நிமிர்ந்தார்கள்.

சுகவனம் மெல்லிய குரலில் கேட்டார்.

''சஞ்சய்... அவருக்கு இவளோட ஜாதக சமாச்சாரம் தெரியுமா...?''

''தெரியும்...''

''அவர் பார்த்து வெச்சிருக்கும் மாப்பிள்ளைகிட்டே இதைப்பத்தி இன்னும் சொல்லியிருக்கமாட்டார்ன்னு நினைக்கறேன்... சொன்னார்ன்னா பின்வாங்கிடுவான்...''

''இல்லை... சந்தியாவைப் பத்தின எல்லா விபரங்களையும் வெளிப்படையா சொல்லிட்டார்... எல்லாமே தெரிஞ்சிருந்தும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க அந்த மாப்பிள்ளை தயாராகவே இருக்கார்...''

''யார் அவர்...?''

''மொதல்ல நீங்க அவளுக்கு கல்யாணம் பண்ணி வெக்கறதைப் பத்தி உறுதியான முடிவுக்கு வாங்க... சந்தியாகிட்டே பேசி அவளை சம்மதிக்க வைங்க...''

சுகவனமும், பாகீரதியும் கவலைப் பார்வைகளோடு யோசனைக்குள் விழ ஆரம்பித்தார்கள்.

'மீண்டும் ஒரு இளைஞனின் உயிரோடு விளையாடத்தான் வேண்டுமா...? இது சரியா...? இந்த முயற்சிக்கு சந்தியா சம்மதம் தருவாளா...?'

## 13

டாட்டா சியரா தேர்த்தனமாக அந்த பங்களாவிற்குள் பிரவேசித்தது. மங்கலான மஞ்சள் வெளிச்சத்தைக் கொட்டும் போர்டிகோவில் சொருகி இயக்கத்தை அறுத்துக் கொள்ள - இறக்கை விரித்துக் கொண்ட கதவிலிருந்து பரஞ்சோதி இறங்கினார்.

பங்களாவுக்குள்ளிருந்து ஒரு சிப்பந்தி ஓடி வந்து காருக்குள் இருந்த ப்ரீஃப்கேசை எடுத்துக் கொண்டான்.

டையைத் தளர்த்திக் கொண்டே உள்ளே சென்றவர்... ''மணி...'' என்று குரல் கொடுத்தார்.

அந்த மணி பவ்யமாய் வந்து எதிரே நின்றான்.

''அய்யா...''

''ரொம்ப டயர்டா இருக்கேன்... நைட் சாப்பிட எதுவும் வேண்டாம்... ஃப்ரிட்ஜ்ல கோலா இருக்கா...?''

''வாங்கி வெச்சிருக்கேன்ங்க...''

''அதைக் கொண்டுவா... போதும்...''

''சரிங்கய்யா...''

தலையசைத்து விட்டுச் சென்றான் அவன்.

பரஞ்சோதி டிரஸ்சிங் அறைக்குள் நுழைந்து இரவு உடைக்கு மாறினார். உடையின் பெரிய பொத்தான்களை மாட்டியபோது அந்த மணி வந்தான்.

டின் கோலாவை அவரிடம் நீட்டினான்.

அதன் வாயை உடைத்து தொண்டைக்குள் சரித்தார் பரஞ்சோதி.

அந்த விநாடி -

டெலிபோன் உச்ச ஸ்தாதியில் வீறிடத் துவங்கியது.

டின் கோலாவை மேஜை மேல் வைத்துவிட்டு - ரிசீவரைக் கையில் எடுத்தார்.

''ஹலோ... பரஞ்சோதி ஹியர்...''

மறுமுனை பேச ஆரம்பிக்க...

படிப்படியாய் அவர் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் விழ ஆரம்பித்தன.

## 14

ஹெட்லைட் வெளிச்சத்தால் சாலை இருட்டைக் கழுவியபடி விரைந்தார் பரஞ்சோதி.

போனில் வந்த அதிர்ச்சித் தகவல் அவருடைய களைப்பை விரட்டியடித்திருந்தது.

இளங்கோ வீதியைத் தொட்டுக் காரைத் திருப்பினார். தெருவின் மையத்தில் கும்பல் நிற்பது மசமசப்பாய்த் தெரிந்தது.

அருகில் நெருங்க - பெரும்பாலும் காக்கி உடுப்புகள் கண்ணில் பட்டன.



காரை ஓரமாய் நிறுத்திவிட்டு இறங்கி வந்தார் பரஞ்சோதி.

சாலையின் நடுவே பர்சனல் ஆபீசர் பவன்குமார் தாறுமாறாய் விழுந்து கிடந்தான்.

அவனைச் சுற்றிலும் ரத்தக் குட்டை.

இறந்துகிடக்கும் அவனைப் பார்த்ததும் ஒரு விநாடி அவர் நெஞ்சுக்குள் 'ஹக்'கென்று ஒரு குத்தூசி சொருகியது.

அங்கே சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் முரளீதரன் இவரைப் பார்த்ததும் நெருங்கி வந்தார்.

''நீங்கதான் இவர் வேலை பார்க்கிற கம்பெனியின் ஜீயெம்மா...?''

''ஆமாம் இன்ஸ்பெக்டர்...'' என்று தலையசைத்தவர் பதட்டம் விரவிய குரலில் கேட்டார், ''எப்படி ஆச்சு இன்ஸ்பெக்டர்...? விஷயத்தைக் கேட்டதுமே ஷாக் ஆயிட்டேன் நான்...''

''லேபர்சோட டீல் பண்றவரா இவர்...?''

''ஆமா... ஹி ஈஸ் அவர் பர்சனல் மேனேஜர்... தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை ஹேண்டில் பண்ணி சமாளிக்கறது தான் பவன்குமாரின் வேலை...''

''இவர் மேல கோபமும் அதிருப்தியும் கொண்டிருக்கும் யாரோ சில தொழிலாளர்கள் தூண்டிவிட்டு ஆளமர்த்தி இவரைக் கொலை செஞ்சிருக்காங்க...''

''இ... இன்ஸ்... பெக்டர்... எப்படி இவ்வளவு உறுதியா சொல்றிங்க...?''

''நடந்த சம்பவத்தை இவரே மரண வாக்குமூலமாகக் கொடுத்திருக்கார்...''

''பவன்குமார் பேசினானா...?''

''எஸ்... இவர் வழக்கமா வீட்டுக்கு லேட் நைட்டில் திரும்பி வருவார்ங்கறது தெரிஞ்சி... நாலைஞ்சு ரவுடிகள் இவர் வீட்டு வாசலிலேயே காத்திருந்திருக்காங்க... எல்லார் கையிலும் பயங்கர ஆயுதங்கள் இருந்திருக்கு... எப்பவும் போல

திரும்பினவரின் காரை ரோட்டிலேயே மறிச்சு மிருகத்தனமா தாக்கியிருக்காங்க...''

''யாருமே பார்க்கலையா...?''

''இந்த ஏரியா முழுவதுமே மேல் தட்டு ஜனங்க. ரோட்டில் நடக்கற சம்பவங்களைப்பத்தி அக்கறை இல்லாதவங்க. வீடுகளும் நெருக்கமில்லாத தெருவை விட்டு உள் வாங்கியிருக்கு... அதை சாதகமாக்கிக்கிட்டு தாக்கிட்டாங்க...''

''உங்களுக்கு எப்படித் தகவல் கிடைச்சது...?''

''இந்த ஏரியாவின் நைட் பீட் கான்ஸ்டபிள்தான் குற்றுயிரும், குலையுயிருமாக் கிடந்த இவரைப் பார்த்திருக்கார்... அவர்கிட்டே சிரமப்பட்டுப் பேசி நடந்ததைத் தெரிவிச்சிருக்கார் பவன்குமார்...! 'தொழிலாளர்களுக்கு விரோதமா நடந்துகிட்ட உனக்கு இதுதாண்டா தண்டனை'ன்னு சொல்லிகிட்டே அடிச்சாங்களாம்...''

''ஆஸ்பிட்டலைஸ் பண்ண முயற்சி எடுக்கலையா...?''

''உறவினர்கள் யாருமில்லை... உங்க பேரைச் சொல்லி... 'அவருக்கு உடனே தகவல் கொடுங்க... அவர்தான் எனக்கு அப்பா மாதிரி'ன்னு சொல்லிட்டு ஸ்பாட்லயே செத்துட்டார்... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகக்கூடிய நிலைமையில் அவர் இருக்கலை...''

''அநியாயமா இருக்கு இன்ஸ்பெக்டர்... பவன்குமாரின் மரணத்தை இன்னும் என்னால் நம்ப முடியலை...''

''உங்க கம்பெனியில் அவர் மேல இந்த அளவுக்கு வன்மம் வெச்சிருக்கக்கூடிய நபர் யாருன்னு உங்களால சொல்ல முடியுமா...?''

''திடீர்ன்னு என்னால எதையும் சொல்ல முடியலை இன்ஸ்பெக்டர்...''

''யாராவது தொழிலாளியோட ஏற்பட்ட தகராறு உங்களுக்கு இப்போ ஞாபகத்துக்கு வரலாம்...''

''இல்லை... அவசரப்பட்டு நான் எதையும் சொல்ல விரும்பலை... நாளைக்கு கம்பெனிக்குப் போனதும் பர்சனல் செக்ஷனில் தீவிரமா விசாரிச்சிட்டு



அப்புறம்தான் என்னால எதையுமே சொல்ல முடியும்...''

''சுட்டோட சூடா விசாரணையைத் துவக்கினா குற்றவாளி எளிதில் அகப்பட்டுக்குவான்... சந்தேகத்துக்குரிய நபர்களை நீங்க தைரியமா என்கிட்டே சொல்லலாம்... யார்கிட்டேயும் அநாவசியமா ஹார்ஷா நடந்துக்க மாட்டோம்... முகாந்திரம் இருந்தால்ஒழிய யார்கிட்டேயும் கடுமையைக் காட்டமாட்டோம்...''

''ப்ளீஸ்... எனக்கு ஒருநாள் அவகாசம் கொடுங்க இன்ஸ்பெக்டர்... ஆபீஸ் ரெக்கார்ட்சைப் பார்த்துட்டு அப்புறம் சொல்றேன்... தகராறு பண்ணக்கூடிய லேபர்ஸ் சிலர் இருக்காங்க... ஆனா கொலைங்கறப்போ யோசிக்க வேண்டியிருக்கு...''

முரளீதரன் அவரையே பார்த்தார்.

## 15

பரஞ்சோதி பங்களாவுக்குத் திரும்பியபோது நேரம் பதினொன்று இருபது.

பவன்குமாரின் சடலத்தை மார்ச்சுவரிக்குக் கொண்டு செல்லும் வரை கூடவே இருந்துவிட்டு வந்தார்.

காலையில் பாடி கிடைக்கும் என்றார்கள்.

சம்பிரதாய பாரங்களில் கார்டியன் என்று எழுதி அவரே கையெழுத்தைப் போட்டார்.

உச்ச பட்ச களைப்பு அவரைத் தாக்கியிருந்தது.

போனதும் படுக்கையில் விழச் சொல்லி உடல் கெஞ்சியது.

இன்னும் ஒரு வேலை பாக்கியிருக்கிறது.

டெலிபோன் ரிசீவரை எடுத்து பொத்தான்களைத் தடவினார்.

''ஹலோ...'' என்றது மறுமுனை - தூக்கக் கலக்கத்தோடு.

''சஞ்சய்யா... பேசறது...?''

''எஸ்...''

''நான் பரஞ்சோதி பேசறேன்... ஸாரி ஃபார் த

டிஸ்டர்பன்ஸ் சஞ்சய்...''

வந்த கொட்டாவியை அடக்கிக்கொண்டு சற்றே சுறுசுறுப்பான குரலை வெளியிட்டான் சஞ்சய்.

''இட்ஸ் ஆல்ரைட் ஸார்... என்ன விஷயம்...? இந்த ராத்திரி நேரத்தில் போன் பண்ணியிருக்கிங்க...?''

''உங்ககிட்டே உடனே பேசியாக வேண்டிய கட்டாயம்...''

''என்ன பேசணும் ஸார்...?''

''சந்தியாவுக்கு இன்னொரு கல்யாணம் செய்து வெய்க்கறதைப் பத்திப் பேசினோமே... அந்த விஷயத்தை அவங்க வீட்டில் சொல்லிட்டிங்களா...?''

''சொல்லிட்டேன் ஸார்...''

''மைகுட்னஸ்... எல்லாமே கெட்டது...''

''என்ன சொல்றிங்க...?''

''ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடந்திருச்சு சஞ்சய்...''

''என்னாச்சு ஸார்...?''

''பவன்குமார் இறந்துட்டார்...''

அதிர்ச்சியுடன், ''ஸார்...'' என்று படபடத்தான் சஞ்சய்.

''அதிர்ச்சியும் திகைப்புமா இருக்கு... அவளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சார் பவன்குமார்... அதுக்குள்ளே அவளோட தோஷம் வேலையைக் காட்டிடுச்சே... மூட நம்பிக்கைன்னு நாம சுலபமா ஒதுக்கித் தள்ளினோம்... பவன்குமாரோட வாழ்க்கை அநியாயமா முடிஞ்சி போச்சே...?''

''இல்லே சஞ்சய்... ஜோசியத்துக்கும் பவன்குமாரோட மரணத்துக்கும் எந்த சம்பந்தமும் இருக்கறதா எனக்குத் தோணலை...''

''நல்லாத்தானே ஸார் இருந்தார்... திடீர்னு எப்படி இறந்தார்...?''

''தொழிலாளர் பிரச்சனைக்கு பலியாயிட்டார்... யாரோ சில லேபர்ஸ் கூலிக்கு ஆளமர்த்தி வன்மத்தோட அவரைத் தீர்த்துக் கட்டிட்டாங்க... சந்தியா வீட்டில் விஷயத்தை சொல்லாம இருந்திங்கன்னா பரவாயில்லைன்னு நினைச்சேன்...



ஏன்னா இந்தக் கொலை தற்செயலா நடந்து இருந்தாலும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சதாலதான் பவன்குமார் இறந்தார்ன்னு அவங்க பலமா நம்பிடுவாங்க...''

''நான் பவன்குமாரைப் பத்தி அவங்ககிட்டே எதுவும் சொல்லலை ஸார்... எல்லாமே தெரிஞ்சும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஒருத்தர் தயாரா இருக்கார்ன்னு மட்டும் சொன்னேன்... அவளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்ச நபர் யார்ன்னு அவங்களுக்குத் தெரியாது...''

''அப்படியே இருக்கட்டும் சஞ்சய்... பவன்குமாரைப் போலவே பரந்த மனசோட இன்னொருத்தன் கிடைக்காமப் போகமாட்டான்...''

''ஸார்...'' என்று அதிர்ச்சி காட்டினான் சஞ்சய்.

''ஏன் சஞ்சய்...?''

''பவன்குமாரோட மரணச் செய்தியை இப்போ கேட்டப்புறம் இதைப் பத்தி யோசிக்க எனக்கே பயமா இருக்கு...''

''அப்படிச் சொல்லாதிங்க... பழி ஒரு பக்கம் பாவம் ஒருபக்கம்ங்கற மாதிரி நீங்களும் பேசி சந்தியாவோட வாழ்க்கை வீணாகக் காரணமாயிடாதிங்க... ப்ளீஸ்... பவன்குமாரோட பிரச்சனை முடிஞ்ச பிறகு என்னோட முயற்சிக்கு நீங்க கண்டிப்பா உதவணும்...''

திட்டவட்டமாய்ச் சொல்லிவிட்டு போனை வைத்தார் பரஞ்சோதி.

## 16

ஆட்டோ குலுங்கிக் கொண்டே ஓட - பின் இருக்கையில் சுகவனமும், பாகீரதியும் இருந்தார்கள்.

பாகீரதி கேட்டாள்.

''எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரைக்கும் அவரைப் பார்க்கலாம்ங்க...?''

சர்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டு அந்த பேப்பர் கட்டிங்கை வெளியே எடுத்தார் சுகவனம். குவித்த பார்வையில் சின்னச்சின்ன எழுத்துக்களைப்

படித்து விட்டுச் சொன்னார்.

''காலைல பத்து மணியிலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் பார்க்கலாம்.

''முன்கூட்டியே அப்பாயின்மெண்ட் வாங்க வேண்டியதில்லையா...?''

''வாங்கணும்... ஆனா அவர் தங்கியிருக்கற லாட்ஜில் என்னோட சிநேகிதன்தான் புக்கிங் கிளார்க்கா வேலை பார்க்கறான்... அவனை நேத்திக்கே போன் பண்ணிக் கேட்டேன்... 'நீ எப்ப வேணா வா... நான் உன்னை காக்க வெக்காம அவர்கிட்டே கூட்டிட்டுப் போறேன்'னு சொன்னான்...''

''அவர் பேர் என்னங்க...?''

''ஜோதிட சிகாமணி சாமைய்யர்... ரொம்பப் பிரபலமான ஆசாமி... நாலு புஸ்தகத்தைப் படிச்சாத்தானே உனக்கு இதெல்லாம் தெரியும்...''

''இவராவது சந்தியாவோட ஜாதகத்தைப் பார்த்துட்டு நல்ல வார்த்தை சொல்லுவாங்களா...?''

''அதை நான் எப்படி சொல்ல முடியும்...? நம்ம பொண்ணு தலைல என்ன எழுதியிருக்கோ அதை யாரால மாத்த முடியும்...?''

''அப்புறம் ஏன் இப்போ வரிஞ்சி கட்டிகிட்டு நாம இவரைப் பார்க்கப் போறோம்...?''

''சஞ்சய் வந்து ஒரு மாப்பிள்ளை பத்தி தகவல் தந்துட்டுப் போனான்... அதைப்பத்தி யோசிச்சிட்டு இருக்கறப்பத்தான் இந்த பிரபலமான ஜோதிடர் நம்ம ஊர் லாட்ஜில் வந்து தங்கியிருக்கற விளம்பரம் கண்ணில் பட்டுச்சு... இவர் பெரிய ஜோதிடர்... நிறையப் படிச்சவர்... ஒருவேளை பரிகாரம் ஏதாவது இருக்குன்னு சொன்னார்ன்னா கொஞ்சம் மனநிறைவோட இந்த மறுகல்யாண முயற்சிக்குத் தலையாட்டி வெக்கலாமே...''

''ஒரு வேளை எல்லாரையும் போல இவரும் 'அவளோட ஜாதகம் அப்படித்தான்... இந்த தோஷத்துக்கு எந்தப் பரிகாரமும் இல்லை'ன்னு அடிச்சி சொல்லிட்டார்ன்னா...? சஞ்சய்க்கு என்ன



பதில் சொல்லுவீங்க...?''

''அப்படிச் சொல்லிட்டார்ன்னா... 'இன்னொரு பையனோட வாழ்க்கையில் நான் விளையாட மாட்டேன்... இந்த மாதிரி விபரீத முயற்சியெல்லாம் தயவு செஞ்சு எடுக்க வேண்டாம்'ன்னு அவன்கிட்டேயும் சொல்லிடுவேன்... மேனேஜர் பரஞ்சோதிகிட்டேயும் சொல்லிடுவேன்... ஒரு சாவைப் பார்த்து நொறுங்கிப் போனோமே... அது போதாதா...?''

பாகீரதி மெல்லிய படலமாய் விழிகளின் மேற்பரப்பில் நின்ற கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

அந்த விநாடி ஆட்டோ அந்த லாட்ஜ் வாசலில் தன் குலுங்கல்களை நிறுத்திக் கொண்டது.

இறங்கி சார்ஜைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பி வைத்தார்.

லாட்ஜின் பெரிய நுழைவாயிலில் நுழைந்தார்கள். ஆபீஸ் என்று எழுதப்பட்ட பெரிய அறைக்குப் போய் அவருக்கு இணையான வயதிலிருந்த ஒரு நபரைச் சந்தித்தார் சுகவனம்.

''வா சுகவனம்... வாங்கம்மா... ஒரு நிமிஷம் சோபாவில் உக்காருங்க... அவரைச் சந்திக்க ஏற்பாடு பண்றேன்...''

எழுதிக் கொண்டிருந்த தடிமனான லெட்ஜரை மூடி வைத்துவிட்டு வெளியே சென்றார்.

சற்று நேரத்தில் திரும்பி வந்து அவர்களை முதல் தளத்திற்குக் கூட்டிச் சென்றார்.

ஜோதிடர் சாமைய்யர் தங்கியிருந்த அறைக்கு அருகில் நிறைய பெஞ்ச் போடப்பட்டு அதில் பலபேர் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இருவரும் நேராய் உள்ளே கூட்டிச் செல்லப்பட்டனர்.

பட்டு ஜிப்பா, வேஷ்டி சகிதமாய் பழம் மாதிரித் தோற்றத்துடன் சாமைய்யர் தெரிந்தார்.

சுகவனத்தின் நண்பர் அறிமுகப்படுத்தி

வைத்துவிட்டு வெளியேற - சுகவனம் சந்தியாவின் ஜாதகத்தை அவரிடம் நீட்டினார்.

ஒரு பத்து நிமிஷம் எடுத்துக் கொண்டு - குடும்ப ஜோதிடர் பாலசிகாமணி பித்ரு மூர்க்க தோஷம் குறித்துச் சொல்லிவிட்டுப் போனதில் தொடங்கி எல்லா விபரங்களையும் விரிவாகச் சொல்லி முடித்தார் சுகவனம்.

அவர் விட்ட இடத்திலிருந்து பாகீரதி தொடர்ந்தாள்.

''இப்போ எங்க மக சந்தியாவுக்கு மறுபடி ஒரு வரன் வந்திருக்கு... இவ்வளவும் தெரிஞ்சும் ஒரு புண்ணியவான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா வந்திருக்கான்... ஆனா எங்களுக்குத்தான் பயமாயிருக்கு... ஒரு தடவை ஜோதிடத்தை அலட்சியப்படுத்தி கிடைச்ச பலன் இன்னும் நெஞ்சை விட்டு நீங்கலை... நீங்க ஜோதிடத்தில் கரை கண்டவர்ன்னு கேள்விப் பட்டிருக்கோம்... மத்தவங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்... அவளுடைய தோஷத்துக்குப் பரிகாரம் ஏதாவது இருக்கான்னு பார்த்து சொன்னிங்கன்னா அதை உடனே செஞ்சிடுவோம்... இப்போ வந்திருக்கிற வரனுக்கு தைரியமா வார்த்தை குடுக்க முடியும்... எங்களோட ஒரே மகளோட வாழ்க்கை நல்லபடியா அமைஞ்சா எங்க மனசுக்கும் நிம்மதி கிடைக்கும்...''

சுகவனம் நீட்டிய ஜாதக நோட்டை வாங்கிப் பிரித்தார். அதிலிருந்த கட்டங்களிலும் எழுத்துக்களிலும் வெகு நேரம் ஆழ்ந்தவர் நெற்றி நிறைய சுருக்க வரிகளைச் சுமந்துகொண்டு நிமிர்ந்தார்.

''இந்த ஜாதகக் கட்டக் குறிப்புப்படி உங்க மகளுக்கு பித்ருமூர்க்க தோஷம் இருக்கறது உண்மைதான்... ஆனா இந்தக் கட்டமே தப்பு...''

சாமைய்யர் அமைதியாய்ச் சொல்ல - தட்டென்று திகைத்துப் போய் நிமிர்ந்தார்கள் இருவரும்.

''எ... என்ன சொல்றிங்க...?''



''இதில் குறிச்சிருக்கற உங்க மகளின் பிறந்த நேரம் தேதியெல்லாம் சரிதானே...?''

''சரிதான்...''

''இந்த நேரக்குறிப்புகளுக்கு இந்த தசா புத்தி கட்டம் இப்படி வராது... யாரோ இதில் திருத்தியிருக்காங்க... உண்மையில் அவளுக்கு பித்ரு மூர்க்க தோஷமே கிடையாது... அந்த தோஷம் இருக்கறதா காண்பிக்க விஷயம் தெரிஞ்ச யாரோ திருத்தியிருக்காங்க...''

''எங்க குடும்ப ஜோதிடர் பாலசிகாமணியைத் தவிர யார் கைக்குமே இது போனதில்லை...''

''ஒரு வேளை அவரே திருத்தியிருக்கலாம்... கையெழுத்து மாறாம இருக்கறதைப் பார்க்கறப்போ அப்படித்தான் தோணுது...''

''அவர் ஏன் அப்படித் திருத்தணும்...?''

''நோக்கம் எனக்குத் தெரியலை...''

''அப்படின்னா கணவனோட உயிரைப் பறித்துப் போடக்கூடிய அந்த தோஷம் சந்தியாவுக்கு இல்லைங்கறிங்களா...?''

''ஆமா... இதை நான் அடிச்சி சொல்லுவேன்...''

''அப்படின்னா அவளோட கணவன் மகேந்திரன் மணவறையிலேயே மரண அவஸ்தையைத் தொட்டுட்டு மீண்டு - அப்படியும் விடாம விதி துரத்தி ஆக்சிடென்ட்ல செத்தது எப்படி...?''

''அதெல்லாம் எனக்குத் தெரியலை... இந்த ஜாதகம் குறைகள் எதுவுமில்லாத சுத்தமான ஜாதகம். அதை மட்டும் என்னால கற்பூரம் அடிச்சி சொல்ல முடியும்... மத்தபடி இந்தக் கட்டங்களில் உள்ள குழப்பத்துக்கெல்லாம் நீங்க உங்க குடும்ப ஜோதிடரையே பார்த்து விசாரிச்சாத்தான் பதில் கிடைக்கும்...''

சுகவனமும், பாகீரதியும் பாதி சந்தோஷமும் பாதி குழப்பமுமாய் ஒருத்தரையொருத்தர், பார்த்துக் கொண்டார்கள்.

## 17

டவுன் பஸ் ஏராளமாய் டீசல் புகையையும், மண் புழுதியையும் வாரி இறைத்துவிட்டுச் சென்றது.

பஸ்ஸை விட்டு இறங்கிய சுகவனம் வெய்யிலின் உக்கிரத்தை - விரித்துப் பிடித்த குடையால் தடுத்தபடி கிராமத்துத் தெருக்களில் நடக்க ஆரம்பித்தார்.

பதினைந்து நிமிஷ நடை.

கிராமத்தின் விளிம்பில் தென்னை மரங்களுக்கு மத்தியில் இருந்த அந்தச் சின்ன கீற்று வீட்டை நெருங்கினார்.

'பாலசிகாமணி வீட்டில் இருப்பாரா... அல்லது வெளியே போயிருப்பாரா...?'

யோசனை பின்னிய மனத்தோடு வீட்டுக் கதவை சமீபித்தவர் கதவில் தொங்கிய பூட்டைப் பார்த்து ஏமாற்றத்தோடு நின்றார்.

சுற்றும் முற்றும் பார்த்ததில் தூரத்து நாயர் கடை கண்ணில் பட்டது.

பாய்லரில் புகை வழியும் அந்த டீக்கடையை நெருங்கினார்.

நாயர் சுகவனத்தை அடையாளம் கண்டு கொண்டவராய் புன்னகைத்தார்.

''வாங்க ஸாரே... ரொம்ப நாளைக்கப்புறம் இந்தப்பக்கம் வர்றீங்க...''

''ஜோதிடர் பாலசிகாமணியைப் பார்த்துட்டு போகலாம்ன்னு வந்தேன்...''

நாயர் டீ ஆற்றுவதை ஒரு விநாடி நிறுத்தி - அவரை ஆச்சரியமாய்ப் பார்த்தார்.

''உங்களுக்கு விஷயம் தெரியாதா...? பாலசிகாமணி மரிச்சுப் போயி இன்னிக்கு முப்பது நாப்பது திவசம் ஆயி...''

''என்ன... பாலசிகாமணி இறந்துட்டாரா... எப்படி...?''

சுகவனத்தின் திடுக்கிட்ட கேள்விக்கு அழுக்கு



பெஞ்ச்சில் உட்கார்ந்திருந்து டீயை உறிஞ்சிக் கொண்டிருந்த மனிதர் பதில் சொன்னார்.

''அவர் வீட்டுக்குப் பின்னால் இருக்கும் மொட்டைக் கிணத்தில் விழுந்து இறந்துட்டார்...''

''கிணத்தில் விழுந்து இறந்துட்டாரா...? எப்படி...?''

''தவறி விழுந்துட்டார்ன்னு சிலர் சொல்றாங்க... தற்கொலை பண்ணிக்கிட்டார்ன்னு வேற சிலர் சொல்றாங்க...''

''அவர் ஏன் தற்கொலை பண்ணிக்கணும்...?''

''பட்டணத்தில் கட்டிக் குடுத்த மகளோட வாழ்க்கை இன்னிக்கு வரைக்கும் பிரச்சனையாத்தானே இருக்கு...?''

''என்ன பிரச்சனை...?''

''அப்பன்கிட்டே இருந்து அதைக் கொண்டு வா... இதைக் கொண்டுவா.. ன்னு அடிச்சு விரட்டறது அவர் மருமகனோட வாடிக்கையான செயல்...''

''இப்போ அந்த வீட்டில் யார் இருக்கா...?''

''உயிரோட இருந்த வரைக்கும் அவர் தனிக்கட்டைதான். மருமகன் அந்த வீட்டை வித்துக் காசு பண்ண முயற்சி பண்றான்... தற்கொலை விழுந்த வீடுன்னு எல்லாரும் வாங்கத் தயங்கறாங்க...''

அங்கிருந்து விடை பெற்று பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தார் சுகவனம்.

கைப்பைக்குள் வைத்திருந்த ஜாதக நோட்டு கனத்தது.

'இதில் இருக்கும் குழறுபடிகளுக்கு விளக்கம் சொல்லக்கூடிய ஒரே நபர் பாலசிகாமணிதான்...'

'அவரும் இப்போது இல்லை...'

''ருத்தியது அவர்தானா...?

'ஏன் திருத்தினார்...?'

'சந்தியாவுக்கு தோஷம் இல்லை என்கிற பட்சத்தில் மகேந்திரன் குடித்த பாலில் பல்லி விழுந்தது தற்செயலா...? அதற்குப்பின் நடந்த

விபத்தும் தற்செயலா...?'

கேள்விகள் மனப் பிரதேசம் எங்கும் முட்டி மோதிக் கொண்டிருக்க -

பஸ் வருவதற்குள் ஒரு முடிவுக்கு வந்தார் சுகவனம்.

## 18

இன்ஸ்பெக்டர் முரளீதான் சுகவனம் சொல்லுபவைகளை ஆச்சர்யத்தோடு கேட்டார்.

''ஜோதிடரோட சாவில் ஏதோ மர்மம் இருக்கறதா நினைக்கறிங்களா...?''

''அப்படித்தான் நினைக்கறேன் இன்ஸ்பெக்டர்... அது மட்டுமில்லே... சந்தியாவோட வாழ்க்கையோட யாரோ விளையாடியிருக்காங்க...''

''எனக்கும் அப்படித்தான் தோணுது... ஜாதகத்தை இப்படித் திருத்தியிருக்கறதைப் பார்க்கிறப்போ அவ கல்யாணம் பண்ணிக்காம தடுக்க யாரோ முயற்சி பண்ணியிருக்காங்கன்னு தெரியுது...' சொத்து வெளியே போகாம இருக்க சிலர் கல்யாணங்களைத் தடுக்க முயற்சிப்பாங்க...''

''நாங்க மிடில் கிளாஸ் குடும்பம் இன்ஸ்பெக்டர்... எங்ககிட்டே பெரிசா சொத்து எதுவும் கிடையாது...''

''சந்தியாவுக்கு முறைப்பையன் யாராவது இருக்காங்களா...?''

''தூரத்து உறவுக்காரன் ஒருத்தன் இருக்கான்... பேரு தருண்...''

''அந்தத் தருணுக்கு சந்தியா மேல விருப்பம் இருக்கா...?''

''அதைப்பத்தித் தெரியலை... நியாயமா பொண்ணு வீட்டைத் தேடி மாப்பிள்ளை வீட்டுக்காராங்க வரணும்... அதுதான் எங்க குடும்ப முறை... அந்த முறைப்படி அவங்க இதுவரைக்கும் வராததால நாங்க வெளியே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சோம்...''

''அது சரிதான் மிஸ்டர் சுகவனம்... இது



பெரியவங்க விவகாரம்... அதே சமயம் அந்தத் தருணுக்கு ஒருவேளை சந்தியா மேல ஆசை இருந்து இந்தக் கல்யாணத்தைத் தடுக்கப் பார்த்திருந்தா...?''

''என்னால எதுவும் சொல்ல முடியலை... எனக்கு எதுவும் புரியாமத்தான் உங்ககிட்டே வந்திருக்கேன் இன்ஸ்பெக்டர்...''

சுகவனம் சொன்ன விநாடி -

''ஙீ...''

''ஙீ...''

''ஙீ...''

டெலிபோன் வீறிடத் துவங்கியது. ரிசீவரை எடுத்தார் முரளீதரன்.

''ஹலோ... இன்ஸ்பெக்டர் முரளீதரன் ஹியர்...''

''......''

''என்ன...? சந்தியா சம்பந்தமாவா...? முக்கியமான தகவல் தரப் போறீங்களா...? என்ன தகவல்...?''

பரபரப்பாய் ரிசீவரில் கவனமானார் முரளீதரன்.

## 19

கே.சி.எஸ். லாரி சர்வீஸ்.

புஷ்டியான எழுத்துக்களைத் தாங்கி நின்ற போர்டுக்குக் கீழே பைக்கை நிறுத்தினார் முரளீதான்.

லாரி ஆபீசுக்குள் நுழைய, கித்தான் சுற்றப்பட்ட உயர உயரமான பார்சல்களுக்கு மத்தியில் அந்த இளைஞன் தெரிந்தான்.

இன்ஸ்பெக்டர் யூனிஃபார்மைப் பார்த்த திகைப்பைக் கண்களில் காட்டியபடியே - ''வாங்க... என்ன ஸார் வேணும்...?''

''உங்க ஆபீஸ் லாரி பத்தின விபரம் வேணும்...''

''என்ன விபரம்...? எந்த லாரியைப் பத்தி...?''

கேட்டவனிடம் மகேந்திரன் விபத்துக்குள்ளான லாரியின் எண்ணைச் சொன்னார்.

''ஓ... அந்த ஆக்சிடெண்ட் ஆன லாரியைப் பத்தின

விபரமா...? ஏற்கனவே நிறையத் தடவை வந்து விசாரிச்சிட்டுப் போனாங்களே... கேஸ் ஃபைலையே மூடியாச்சுன்னு சொன்னாங்களே...?''

''ஒரு தடவை மூடினா மறுபடி திறக்கமாட்டாங்கன்னு நிச்சயமில்லை... அந்த விபத்தில் இப்போ புதுசா சில சந்தேகங்கள் தோணியிருக்கு... அதனால அந்த லாரியை யார் வாடகைக்கு எடுத்தது...? எதுக்காக எடுக்கப் பட்டது...? இந்த விபரங்களெல்லாம் எனக்கு வேணும்...''

''லாரியை எடுத்தது... திருமலை...''

''திருமலையா...?''

''ஆக்சிடென்ட் பண்ணின டிரைவர்...''

''என்ன பர்ப்பஸுக்காக எடுத்தான்...?''

''அல்லிக் குப்பத்தில் இருந்து சரக்கை ஏத்திக்கிட்டு வரணும்னு சொல்லி லாரியை எடுத்துட்டுப் போனான்...''

''எங்கிருந்து சரக்கை எடுக்கப் போனான்...?''

''அல்லிக்குப்பத்திலிருந்து ஸார்...''

சொல்லிக்கொண்டே பழைய ரிஜிஸ்தர் ஒன்றை எடுத்து தூசி தட்டி அதில் அந்த விபரத்தையும், திருமலையின் கையெழுத்தையும் காட்டினான்.

''அவனோட அட்ரஸ் உன்கிட்டே இருக்கா...?''

''இருக்கு ஸார்...''

''ஒரு காகிதத்தில் குறிச்சிக்குடு...''

அவன் துண்டுக் காகிதம் ஒன்றில் பால்பாயிண்ட் பேனாவை நகர்த்தி அவரிடம் நீட்டினான்.

''தேவைப்பட்டா மறுபடி வரேன்...''

''நீங்க எப்ப வேணா வாங்க ஸார்...''

அவனிடம் விடை பெற்று வெளியே வந்த முரளீதரனின் முகத்தில் புதிர் அவிழ்ந்த உற்சாகத்தையும் பரபரப்பையும் காண முடிந்தது.

துண்டு சீட்டிலிருந்த முகவரிக்கு பைக்கை விரட்டினார்.



அழுக்கான ஏரியா. சாக்கடைகள் குறுக்கிட்டன. நாற்றம் குடல் வரை ஊடுருவியது.

அந்தச் சேரி மாதிரியான இடத்தின் ஒரு மூலையில் லாரி டிரைவர் திருமலையின் வீடு இருந்தது.

கதவைத் தட்டினார் முரளீதரன்.

தட்டிக் கதவைத் தள்ளி எட்டிப் பார்த்தான் திருமலை. கண்களில் சாராயச் சிவப்பு நிரந்தர அடையாளமாகப் பதிவாகி இருந்தது. அந்த நிமிஷம்கூட குறைவான அளவில் சாராய நெடி தாக்கியது.

''யா... யார் வேணும்...?''

காக்கி யூனிஃபார்மைப் பார்த்த பதட்டத்தோடு பேசினான்.

''உன்னைத் தேடித்தான் வந்தேன் திருமலை...'' சொல்லிக் கொண்டே உள்ளே பிரவேசித்தார்.

''எ... என்னைத் தேடியா... எதுக்கு...?''

''உன்கிட்டே பேசணும்...''

''என்ன பேசணும்...?''

''ஒரு உண்மையைத் தெரிஞ்சிக்கணும்...''

''எ... என்ன உண்மை...?''

''ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னாடி நீ ஒரு ஆக்சிடென்ட் பண்ணினியே... அது சம்பந்தமா...''

''நான் ஆக்சிடென்ட் பண்ணலை சார்... அந்த ஸ்கூட்டர்காரன் வேகமா வந்து திருப்பத்தில் திரும்பினான்... சடனா என்னால கண்ட்ரோல் பண்ண முடியலை...''

''உன்னோட லாரி சக்கரங்களுக்கு பலியான மகேந்திரன் ஹனிமூன் ட்ரிப்புக்குப் போற அவசரத்தில் வேகமாப் போய் லாரியில் மோதிட்டதாத்தான் எல்லாருமே முடிவு பண்ணி அன்னிக்கு அந்த கேஸ் ஃபைலையே க்ளோஸ் பண்ணிட்டாங்க... ஆனா... இப்போ எனக்கு புது சந்தேகம் கிளம்பியிருக்கே...''

அவன் எச்சில் விழுங்கிக் கொண்டு ... பார்த்தான்.

''எ... என்ன சந்தேகம்...?''

''அன்னிக்கு மகேந்திரன் வேகமாப் போனாலும் போகாட்டியும் அந்த விபத்து நடந்திருக்கும்... லாரி மோதி அவரைக் கொலை பண்றதுன்னு நீ முடிவு பண்ணிட்டே...''

''ஸா... ர்... அபாண்டமா சொல்லாதிங்...''

அவன் பாதி பேசும்போதே 'ரப்'பென்று ஒரு ஆக்ரோஷ அறை கொடுத்தார்.

''என்கிட்டே மறைக்கிற வேலை வேண்டாம்... நேரடியா விஷயத்துக்கு வா... இல்லேன்னா அடி வாங்கியே சாவே...''

பழுத்த கன்னத்தைப் பற்றிக்கொண்டு நடுங்கும் பார்வையில் அவரைப் பார்த்தான்.

முரளீதரன் உறுமலான குரலில் தொடர்ந்து கேட்டார்.

''நீ தப்புப் பண்ணியிருக்கேங்கறதுக்கு என் கிட்டே புலமான ஆதாரம் இருக்கு... அல்லிக்குப் பத்தில் சரக்கு ஏத்தணும்ன்னு சொல்லி லாரியை வாடகைக்கு எடுத்திருக்கே... ஆனா ஆக்சிடெண்ட் நடந்தது சரோஜினி தெருமுனையில்... நீ அங்கே போக வேண்டிய அவசியமேயில்லையே...? நீ பொய்க் காரணம் சொல்லி லாரியை எடுத்திருக் கேன்னு தெளிவாகத் தெரியுது... சொல்லு... ஏன் அவரை லாரி ஏத்திக் கொன்னே?''

மறுபடி அவர் கையை ஓங்க - வெலவெலத்துப் போய்க் கத்தினான் திருமலை.

''ப... பணத்துக்காக அதைப் பண்ணிட்டேன்... என்னை ஒண்ணும் பண்ணிடாதிங்க ஸார்... 'அவங்க ஹனிமூன் போறாங்க... அந்தப் பொண்ணை விட்டுட்டு அந்த ஆளை மட்டும் சரியான சந்தர்ப்பம் பார்த்து யாக்கும் சந்தேகம் வராம தீர்த்துடு'ன்னு சொன்னார்... நான் லாரியை எடுத்துக்கிட்டு அவங்களை வாட்ச் பண்ணிகிட்டு நின்னிருந்தேன்... வெளியூர்ல போய்த் தீர்த்துக் கட்ட வேண்டியிருக்கும்ன்னுதான் நினைச்சேன்... ஆனா திடீர்ன்னு அந்த மகேந்திரன் ஸ்கூட்டரை எடுத்துக்கிட்டு தனியா எங்கேயோ போறதைப் பார்த்தேன். இதுதான் சந்தர்ப்பம்ன்னு தீர்மானிச்சு... சுத்திப் போய் எ...



எதிர்த்திசையில் வந்து ஆக்சிடெண்ட் பண்ணிட்டேன்... அப்போ என்னை யாருமே சந்தேகப் படலை... தப்பெல்லாம் ஸ்கூட்டர்க்காரர் மேலதான்னு எல்லாருமே சொல்லிட்டாங்க...''

''சந்தியாவை விட்டுவிட்டு மகேந்திரனை மட்டும் தீர்த்துக் கட்டச் சொல்லி உனக்குப் பணம் குடுத்தாங்களா...? யார் அது...?''

''சஞ்சய்...''

## 20

சுகவனம், பாகீரதி, சந்தியா, பரஞ்சோதி எல்லாருமே கனத்த அதிர்ச்சியோடு இன்ஸ்பெக்டர் முரளீதரனைப் பார்த்தார்கள்.

சந்தியா முணுமுணுத்தாள்.

''இன்ஸ்பெக்டர்... சஞ்சய் அண்ணா இப்படிச் செஞ்சிருப்பார்ன்னு என்னால கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியலை...''

''சஞ்சய் மேல சந்தேகப் பார்வையைத் துவக்கி வெச்சவர் மேனேஜர் பரஞ்சோதிதான்...'' என்றார் முரளீதரன்.

பரஞ்சோதி தலையசைத்தார்.

''சந்தியாவோட அப்பா முந்தாநாள் என்னைத் தொடர்பு கொண்டார்... அவளோட ஜாதகத்தில் எந்தக் கோளாறும் இல்லைங்கற தகவலைச் சொல்லி அவளுக்கு நான் பார்த்து வெச்சிருக்கும் வரனைப் பத்தி விசாரிச்சார்...''

சுகவனம் ஆமோதித்தார்.

''சஞ்சய் ஆபீஸ் வேலையா வெளியூர் போயிருந்தான்... அதனால காலம் கடத்த விரும்பாம மாப்பிள்ளைப் பையனப் பத்தி மேனேஜரையே கூப்பிட்டு விசாரிச்சேன்...''

''அப்போதுதான் எனக்கு சஞ்சய் மேல சந்தேகம் தட்டுச்சு... பவன் குமாரை தொழிலாளர் பிரச்சனைங்கற பேரில் யாரோ கொலை செஞ்சிருக்காங்கன்னு ஏற்கனவே நான் சந்தேகப்பட்டுட்டிருந்தேன்... சந்தியா ஜாதக

விவகாரத்தில் செய்யப்பட்டிருக்கும் மோசடியும் தெரியவர என் சந்தேகம் வலுத்தது... சந்தியாவை பவன்குமார் கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத் திருக்கற விஷயம் எனக்கும் சஞ்சய்க்கும் மட்டும்தான் தெரியும்... சுகவனம் போன் பண்ணினப்போ குடும்ப ஜோதிடர் இறந்து போன விஷயத்தையும் சொல்லி இதை போலீஸ் கவனத்துக்கு கொண்டு போகப் போறேன்னு சொன்னார்... பவன்குமார் மரணத்துக்கு யார் காரணமாய் இருப்பாங்கன்னு சஜஸ்ட் பண்ணும்படி ஏற்கனவே இன்ஸ்பெக்டர் 'என்கிட்டே கேட்டிருந்தார்... ஆபீசில் விசாரிச்ச அளவில் தொழிலாளர் தகராறு பெரிசா எதுவும் வெடிச்ச மாதிரித் தெரியலை... கூட்டிக் கழிச்சுப் பார்த்த நான் இன்ஸ்பெக்டர்க்கு போன் பண்ணி சஞ்சய் மேல எனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தை சொல்லிட்டேன்...''

''சுகவனம்... நீங்க ரிப்போர்ட் தர வந்தப்ப இவர்கிட்டே இருந்துதான் போன் வந்தது... மகேந்திரனின் மரணத்தை துருவ ஆரம்பிச்சேன்... சம்பந்தமில்லாத இடத்துக்கு லாரியை டிரைவர் திருமலை கொண்டு போனது சந்தேகத்தை உண்டாக்கிச்சு... அவனை மிரட்ட, சஞ்சய்தான் பணம் குடுத்து மகேந்திரனை லாரியை மோதவிட்டு கொலை செய்யச் சொன்னான்னு உண்மையைக் கக்கிட்டான்... பவன் குமாரைக் கொலை செய்ய அவன் ஏற்பாடு செஞ்ச ஆட்களையும் மடக்கிப் பிடிச்சிட்டோம்...''

''சஞ்சய் ஏன் இப்படிச் செய்யணும்...?''

''கைது செஞ்ச நிமிஷத்திலிருந்து திக்பிரமை பிடிச்ச மாதிரி எதுவுமே சொல்லாம நிக்கறான்... மனரீதியான பாதிப்புக்குள்ளாகியிருக்கான்னு நினைக்கறேன்... மனோதத்துவ நிபுணர் வந்திருக்கார்... ஹிப் நாடிஸ முறையில் அவன் கிட்டே இருந்து உண்மைகளைப் பெற முயற்சி பண்ணிட்டு இருக்கார்...''

முரளீதரன் சொன்னபோது - அந்த அறைக் குள்ளிருந்து குறுந்தாடி வைத்த சைக்கியாட்ரிஸ்ட் வேகமாய் வந்தார்.



''இன்ஸ்பெக்டர்... சஞ்சய்யை ஆழ்நிலை மயக்கத்துக்கு உட்படுத்தியிருக்கேன்... நடந்த நிஜங்களை மனம் விட்டுப் பேச ஆரம்பிச்சிருக் கான்... நீங்க உடனே வந்திங்கன்னா வாக்கு மூலத்தைப் பதிவு செய்துக்கலாம்...''

எல்லோருமே அந்த அறைக்குள் விரைந்தார்கள்.

மசமசப்பான வெளிச்சத்துடன் இருந்தது அந்த அறை.

அறை நடுவில் இருந்த கட்டிலில் சஞ்சய் நீளமாய்க் கிடத்தப்பட்டிருந்தான்.

கண்கள் அரை மயக்கத்தோடு சொருகிக்கிடந்தன.

சைக்கியாட்ரிஸ்ட் அவனருகே சென்று கிசுகிசுப்பான குரலில் கேட்டார்.

''சஞ்சய்... நீ நடந்த விஷயங்களை மறுபடி இப்போ ஆரம்பத்தில் இருந்து சொல்லப் போறே...''

மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவன் போல அவன் மென்மையான கரகரத்த குரலில் வார்த்தைகளை வெளியிட ஆரம்பித்தான்...

முரளீதரன் கையடக்க டேப்ரிக்கார்டரை ஆன் செய்தார்.

''சின்ன வயசிலிருந்தே சந்தியா மேல எனக்கு இனம்புரியாத ஈர்ப்பு... அவ வளர்ந்து பெரியவளானப்புறம் அந்த ஈர்ப்பு காதலா மாறிச்சு... காதல்ன்னா வெறித்தனமான காதல்... ஆனா என் காதலை வெளிப்படுத்த முடியாதபடி அவ என்னை அண்ணான்னு கூப்பிட்டிட்டிருந்தா... அதையும் மீறி வெளிப்படுத்தத்தான் நினைச்சேன்... ஆனா என்னால அவளைக் கல்யாணம் பண்ணிட்டு சந்தோஷமா வாழ முடியாதுங்கற உண்மை தெரியவந்தது... அவளைன்னு இல்லை... எந்தப் பொண்ணோடவும் நான் சராசரியான குடும்ப வாழ்க்கை வாழ முடியாதுங்கறது ஒரு மருத்துவப் பரிசோதனையின் போது வெளிப்பட்டுச்சு... எஸ்... நான் ஒரு இம்ப்பொடண்ட்... அதனாலயே என் ஆசையை அவகிட்டே சொல்லவும் முடியாம சொல்லாம இருக்கவும் முடியாம தவிச்சேன்... அந்தச் சூழ்நிலையில்தான் அவளோட கல்யாணப் பேச்சைத்

தொடங்கினாங்க... மகேந்திரன் வீட்டிலிருந்து வந்து அவளைப் பார்த்துட்டுப் போய் சம்மதமும் சொல்லிட்டாங்க... இதை எப்படியாவது தடுக்கணும்ன்னு என் மனசுக்குள்ளே ஓயாம அலறல்... எனக்குக் கிடைக்காத சந்தியா வேற யார்க்கும் கிடைக்கக்கூடாதுன்னு வெறி... அவங்க ஃபாமிலியோட நல்லாப் பழகினதுனால குடும்ப ஜோதிடரை வரவழைச்சு கன்சல்ட் பண்ணு வாங்கன்னு தெரியும்... கிராமத்திலிருக்கும் அவரைப் பார்த்துப் பேசினேன்... அவர் மருமகன் பணத்துக்காக மக மூலமா அவரை அரிச்சிட்டிருந்தான்... அவரோட பணத்தேவையை எனக்கு சாதகமாப் பயன்படுத்திகிட்டேன்... சந்தியாவை யாருமே கல்யாணம் பண்ணிக்க முடியாத மாதிரி அவ ஜாதகத்தை திருத்தி எழுதச் சொன்னேன்... வீட்டுக்கு வந்து கட்டம் போட்டு கணிக்கறப்போ அந்தக் காரியத்தை நான் தரும் பணத்துக்காக கச்சிதமா செஞ்சு முடிச்சிட்டார் அவர்... இப்படி ஒரு பலனைச் சொன்னபிறகு சந்தியாவுக்குக் கல்யாணம் பண்ணிவெக்க இவங்க துணியமாட்டாங்கன்னு நினைச்சேன்... அப்படியே இவங்க துணிஞ்சாலும் மத்தவங்க முன்வர மாட்டாங்கன்னு நினைச்சேன்... என் கணக்கு தப்பானது... மகேந்திரன் வீட்டில் ஜாதகமே பார்க்கலை... இவங்களும் ஜோதிடர் சொன்னதை மீறி கல்யாணத்தைப் பண்ணினாங்க... ஜாதகத்தில் திருத்தினதை உண்மையாக்கணும்ங்கற வேகம் எனக்குள் உண்டானது... அதுக்காக மகேந்திரனை சாகடிக்கவும் நான் துணிஞ்சேன்... அவனுக்குக் கொண்டு போன பாலில் யார்க்கும் தெரியாம பல்லியைப் போட்டு வெச்சேன்... ஆனா மகேந்திரன் சாகலை... என்னை நல்லவனாக் காட்டிக்க அப்போ நானே எனக்குத் தெரிஞ்ச டாக்டரை வரவழைச்சேன். ஆனா அப்பவே மனசுக்குள் முடிவெடுத்தேன்... கூடிய விரைவில் மகேந்திரனைத் தீர்த்துக்கட்டி சந்தியாவை மறுபடி என் பார்வைக்குள்ளேயே கொண்டு வரணும்ன்னு... திருமலை மூலமா அதைச் செஞ்சேன்... அதுக்கப்புறம் சந்தியாவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வெக்கிற துணிச்சல் அவங்களுக்கு இருக்காது... இன்னொரு கல்யாணம் பண்ணிக்கற துணிச்சல்



அவளுக்கும் வராதுன்னு மனசுக்குள்ளே சந்தோஷப்பட்டேன்... அதே சமயம் வெளியே என்னை நல்லவனாக் காட்டிக்க அவளோட நிலைமைக்காக கவலைப்படறதா நடிச்சேன்... அவளுக்கு இன்னொரு கல்யாணம் செஞ்சு வெய்க்க முயற்சி எடுக்கற மாதிரி பாவலா பண்ணினேன்... ஆனா மேனேஜர் பரஞ்சோதி நிஜமாகவே அப்படி ஒரு முயற்சியை எடுத்துட்டார்... அதுக்குத் தோதா முற்போக்கு எண்ணங்களோட பவன்குமார் வந்தான்... அவர் எப்படியும் முயற்சி எடுத்து இவங்களை சம்மதிக்க வெச்சு சந்தியாவுக்கு கல்யாணம் பண்ணி வெச்சிருவார்ன்னு தெரிஞ்சதும் நான் ரொம்ப படபடப்பாயிட்டேன்... இப்படி ஒரு முயற்சி எடுக்கும் பரஞ்சோதிக்கு புத்திபுகட்ட இன்னொரு கொலை செய்யவும் தயாராயிட்டேன்... கூலிக்கு ஆளமர்த்தி லேபர் பிரச்சனை போர்வையில் கொலை நடக்கும்படி செஞ்சேன்... ஆனா பரஞ்சோதிகிட்டே சந்தியாவோட ஜாதக தோஷம்தான் பவன்குமாரோட மரணத்துக்குக் காரணம்ன்னு ஸ்தாபிதம் பண்ண முயற்சி செஞ்சேன்... அவரும் அதை நம்பிடுவார்... போலீசும் இது தொழிலாளர் பிரச்சனைன்னு நினைச்சு குழம்பும்ன்னு கணக்குப் போட்டேன்... ஆனா அவர் அப்படி நம்பலை... இது லேபர் பிரச்சனை இல்லைன்னு ஆணித்தரமா சொல்லி போலீசையும் என்னை நோக்கித் திசை திருப்பிட்டார்... உண்மை வெளியே வரக்கூடாதுங்கற பயத்தில் இடையே ஒரு நாள் கிராமத்துக்குப் போயி ஜோதிடர் பாலசிகாமணியைக் கிணத்தில் தள்ளி நான்தான் கொலை செஞ்சேன்... அவர் ஒரு பயந்த ஆசாமி... பணத் தேவைக்காக என் பேச்சைக் கேட்டு தப்பு பண்ணிட்டார்... எப்ப வேணா அவர் மனசு மாறி இவங்ககிட்டே ஓடிவந்து உண்மையைச் சொல்லிடுவார்ன்னு பயந்தேன்... அதனால கிராமத்துக்குப் போய் ஒரு ராத்திரியில் அவரைக் கிணத்தில் தள்ளிட்டேன்... இப்போ நான் போலீசில் மாட்டிக்கிட்டது ஒரு வகையில் எனக்கு சந்தோஷமாத்தான் இருக்கு... ஏன்னா இத்தனை விஷயங்களையும் உள்ளுக்குள்ளேயே வெச்சுப் புழுங்கறதவிட வெளியில் சொல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கே... இப்போவாவது சந்தியாவுக்கு என்னோட அபரிமிதமான அன்பு தெரிஞ்சிருக்குமே..."

சஞ்சய் ஆழ்நிலை உறக்கத்தில் மேலும் மேலும் நிறைய பிதற்றிக் கொண்டே போனான்.

சந்தியா உடலும் குரலும் நடுங்கச் சொன்னாள்.

''சஞ்சய் ஒரு நாளும் என்னைத் தப்பான பார்வை பார்த்தது இல்லை இன்ஸ்பெக்டர்... இப்படி ஒரு எண்ணம் ஏற்பட நானும் இவருக்கு எள்ளிக்குமே இடம் தந்ததில்லை...''

சைக்கியாட்ரிஸ்ட் சொன்னார்,

''அடிப்படையில் சஞ்சய் நல்லவன்தான்... உள்மனசில் எழுந்த ஆசை அவனை இந்த நிலைக்கு ஆக்கிடுச்சு...''

பாகீரதி அழுகையில் வெடித்தாள்.

''மொத்தத்தில் என் பொண்ணோட வாழ்க்கையை இந்தப் பாவி கூடவே இருந்து நரகமாக்கிட்டானே...''

''பவன்குமார், மகேந்திரன் வாழ்க்கையில் சஞ்சய் மூலமா விதி கோரமா விளையாடிடுச்சுங்கறது உண்மைதான்... இன்னும் சந்தியாவோட வாழ்க்கை வீணாகலை... அவளுக்கு ஒரு நல்ல கணவன் கிடைப்பான்... இதுவரை நடந்ததெல்லாம் கெட்ட கனவு. இனிமேல்தான் அவளோட உண்மையான வாழ்க்கை தொடங்குது... அவளோட கல்யாணத்தை நான் முன்னால நின்னு நடத்தித் தர்றேன்...'' என்றார் பரஞ்சோதி.

''சஞ்சய் உண்மையில் ஒரு கைதி இல்லை... நோயாளி... இவனுக்குள் இருக்கும் மன நோயை என்னால கூடிய சீக்கிரம் குணப்படுத்த முடியும்... சந்தியாவுக்குக் கல்யாணம் நடக்கையில் இவன் பரோலில் வெளியே வந்து தங்கச்சிங்கற நிஜமான உணர்வோட அவளை வாழ்த்துவான் பாருங்க...'' என்றார் சைக்கியாட்ரிஸ்ட்.

எல்லோர் மனசிலும் அந்த நம்பிக்கை தெறித்து விழுந்து ஒட்டிக் கொண்டது.

**(முற்றும்)**